
அதிக
செம்மையாகத்
துலக்குகிறது!
நீடித்து நிற்கிறது!
இப்பொழுதே ஒன்று வாங்குங்கள்
1 நீர் கடக்காது நனைவுமேற்காது.
2 விஷக்கிருமிகளகற்றப்பட்ட கிலாஸ் ட்ரூபுகளில் சீல் செய்யப் பட்டது.
3 பற்களைச் சுத்தப்படுத்தி, வெண் மையாக்குவதில் 60% அதிக பயனளிக்க வல்லது.
4 ஒரு வருட உத்தரவாத முடையது.
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
Dr. West's
TOOTH
PASTE
மிருகங்களின் மயிரே கிடையாது!
விநியோகஸ்தர்கள்:
எல். டி. ஸெய்மூர் & கோ
(இந்தியா) லிமிடெட்
12/A, லிங்க செட்டித் தெரு
தபால் பெட்டி 200, மதராஸ்
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்

நமது யோசனை



இந்தியாவில் வெயில் அதிகம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.
இந்தியா தேசம் ரொம்பவும் உஷ்ண மான தேசம்.
ஐறுப் ஜின்னாவின் தடையை மீறத் - தயாராயிருங்கள்.
என்னுடைய உத்தரவின்றி மேலே செல்ல முடியாது.
ஜின்னா
நாது கோஷ்டி- யினரின் மந்தி ராலோசனை.
அதிகார வர்க்கத்தினரின் ஜர்தாம்ப வேலை நடக்கலாம். உஷார்!

-உம்மன்


போலிக்கூட்டத்தார்களின் போலிக் கூச்சல்-
களைப் பொருட்படுத்த வேண்டாம்.
நாங்கள் இந்நாட்டு மன்னர்-
கள். எங்களதே ராஜ்யம்.
ருஷ்யா
இந்தியா எல்லைப்புறம்
அந்நிய தேசங்கள்
இந்தியாவைக் கவனித்துக்
கொண்டிருப்பது ஞாபகம் இருக்கட்டும்.
இவற்றை யெல்லாம் கவனித்து நடந்தால் தூதுகோஷ்டி வந்த காரியம்
வெற்றி பெறலாம்.

கல்கி
பொருளடக்கம்

மலர் 5 | இதழ் 33

1946 மார்ச் 24

பார்த்திப ஹு பங்குனி 11

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

தமிழ்நாடு அளித்த தவப் புதல்வர்களுக்குள்ளே முதன்மையான புதல்வர்; இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பு பிறந்தவர்; எனினும், 'என்றுமுள தென் தமிழை'ப்போல் இன்றைக்கும் என்றைக்கும் சிரஞ்சீவியாய் விளங்கும் மகா புருஷர்;—அத்தகைய தெய்வப் புலமைத் திருவள்ளுவர் நமது இந்த இதழின் அட்டையில் காட்சி அளிக்கிறார்.



சமீபத்தில் திருவள்ளுவர் திருவிழா தமிழகத்தின் பல இடங்களிலும் கொண்டாடப் பட்டதுபோல் பெரம்பூர் தமிழர் மன்றத்தினராலும் கொண்டாடப்பட்டது. ஆனால், பெரம்பூரில் மேற்படி விழாவைக் கொண்டாடிய விதத்தில் கொஞ்சம் விசேஷம் உண்டு. "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!" என்னும் நம் காலத்து மகாகவியின் வாக்கைப் பலிக்கச் செய்யுமாறு, பெரம்பூர் தமிழர் மன்றத்தார் திருவள்ளுவரின் உருவப் படத்துடன் ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, ஒவ்வொரு முக்கிய வீதியின் முனையிலும் நின்று, திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். மேற்படி ஊர்வலக் காட்சியை இந்த இதழின் 38-ம் பக்கத்தில் காணலாம்.

பெரம்பூர் தமிழர் மன்றத்தார் மேற்கண்டவாறு வருஷத்துக்கு ஒரு நாள் திருவிழாக் கொண்டாடுவதோடு நின்றுவிடாமல் வாரந்தோறும் திருக்குறள் வகுப்பும் நடத்தி வருகிறார்கள். மன்றத் தலைவர் வித்வான் கேதாரீசுவர சர்மா அவர்கள் பாடம் சொல்லி வருகிறார்.

தமிழும் தமிழ்க் கவிகளும் தமிழ்ப் பெரியார்களும் இவ்விதம் தமிழகத்தில் கொண்டாடப்பட்டு வரும் வரையில், அரசியல் முதலிய துறைகளில் என்ன விகல்பங்களும், விபரீதங்களும் தோன்றினால்தான் என்ன?—தமிழ்நாட்டின் வருங்கால மேன்மையைக் குறித்து நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

கல்கி

மலர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் { இதழ் 33

என்ன சேதி?

தாகசாந்தி' பட்ஜெட்

சென்னை அட்வைஸரி கவர்ன்மெண்டாரின் கடைசி பட்ஜெட் சென்ற வாரத்தில் வெளியாகி யிருக்கிறது. அது பஞ்ச நிவாரண பட்ஜெட்டா யிருக்கும் என்று பலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அது 'தாகசாந்தி' பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது! வரப்போகும் வருஷத்தில் 41 கோடி ரூபாய் இந்த மாகாணத்துக்கு வருமானம் எதிர் பார்க்கிறார்கள். இதில் 13 கோடி ரூபாய் கலால் வருமானம். இந்த 13 கோடியில், அயல் நாட்டு மது வகைகளில் வருமானம் சுமார் 60 லட்சம் தான். பாக்கி யெல்லாம் கள், சாராய வருமானந்தான். அதாவது நாட்டில் ஏழைகளிலும் ஏழைகளான கிராமக் குடியானவர்கள், தொழிலாளர்கள் இவர்களிட மிருந்து வசூலிக்கப்படுவது. நாட்டில் பெரும் பஞ்சம் வரலாம் என்று எதிர்பார்க்கப்படும் வருஷத்தில் பரம ஏழைகளிடமிருந்து 13 கோடி ரூபாய் கள்ளிலும் சாராயத்திலும் வரி வசூலிக்கத் திட்டம் போட்டிருக்கும் அநியாயத்தைப் பற்றி நினைத்தாலே பற்றிக்கொண்டு எரிகிறது. காங்கிரஸ் மந்திரி சபை ஏற்பட்டதும் முதற் காரியமாக இந்தப் படுபாதக வரி 13 கோடிக்கும் தலைமுழுகி யாகவேண்டும்!

மற்றப்படி இந்த வரவு செலவுத் திட்டத்தில் இன்னும எவ்வளவோ குறைபாடுகள் இருக்கின்றன. பயங்கரப் பஞ்சம் எதிர்பார்க்கப் படும்போது, நிலவரி வசூலுக்கு வழக்கம் போலவே 5 கோடி சொச்சம் திட்டம் போட்டிருக்கும் அசட்டுத்தனத்தைப் பற்றி எவ்வளவோ எழுதலாம். ஆனால் இந்த அழகான வரவு செலவுத் திட்டத்தை வரப்போகும் காங்கிரஸ் மந்திரி சபை அடியோடு மாற்றியே தீரவேண்டு மாதலால், மேற்படி குறைபாடுகளைப் பற்றி விரிவாக எழுதிக் காகிதத்தை வீணாக்க நாம் விரும்பவில்லை.

என்ன பிரயோஜனம்?

வேவல் எவ்வளவோ குல்லாப் போட்டுப் பார்த்தார். தாஜா பண்ணிப் பார்த்தார். காக்காயும் பிடித்துப் பார்த்தார்.

ஆனால் காங்கிரஸ் எதற்கும் மசியவில்லை.

வேவல் காங்கிரஸிடம் செய்து கொண்ட வேண்டுகோள், தாம் ஏற்படுத்தப் போகும் உணவுக் கமிட்டியில் காங்கிரஸ் தலைவர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

சென்ற வாரம் பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி வைஸிராயின் மேற்படி வேண்டுகோளை நிராகரித்து விட்டது.

இன்று ஜனங்களிடம் செல்வாக்குள்ளவர்களுக்கு அதிகாரம் இல்லை; அதிகாரத்திலிருப்பவர்களுக்குச் செல்வாக்கு இல்லை.

அதிகாரம் இல்லாமல் வெறுமே உணவுக் கமிட்டியில் இருந்துகொண்டிருப்பதில் என்ன பிரயோஜனம்?

வெறும் ஆலோசனை சொல்லும் வேலைக்குத்தான் சர்க்காரிடம் எத்தனையோ அட்வைஸர்கள் இருக்கிறார்களே!

அவர்கள் காங்கிரஸ் தலைவர்களைக் காட்டிலும் இன்னும் எவ்வளவோ அடக்கமாகவும் பணிவாகவும் குறிப்பறிந்தும் அந்த வேலையைப் பார்ப்பார்க ளல்லவா?

இதையெல்லாம் யோசித்துத்தான் காங்கிரஸ் வைஸிராயின் வேண்டுகோளை மறுத்திருக்கிறது. தேசிய சர்க்கார் ஏற்பட்டு, அதிகாரம் பொதுஜனத் தலைவர்கள் கைக்கு மாறினாலொழிய வைஸிராய் ஏற்படுத்தப் போகும் உணவுக் கமிட்டியால் யாதொரு பலனுமில்லை என்று சாதித்திருக்கிறது.

நல்ல சந்தர்ப்பம்

காரியக் கமிட்டி செய்திருக்கும் மற்றொரு முக்கியமான தீர்மானம் மந்திரி

சபை யமைப்பைப் பற்றியதாகும். காங்கிரஸ் மெஜாரிட்டியாக வரப்போகும் ஐக்கிய மாகாணம், பீகார், மத்திய மாகாணம், சென்னை, பம்பாய், ஒரிஸ்ஸா முதலிய மாகாணங்களில் முஸ்லிம் லீக் அங்கத்தினர்களையும் மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ளக் காங்கிரஸ் சம்மதம் தந்திருக்கிறது. மௌலானா ஆஸாத் ஏற்கெனவே இதைச் செய்கையிலே செய்து காட்ட முயன்றார். அஸ்ஸாம் மந்திரி சபையில் லீக் அங்கத்தினர்களையும் சேர்த்துக் கொள்ள முன் வந்தார். ஆனால், லீக் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதாவது ஜனாப் ஜின்னா ஒப்புக்கொள்ளவில்லை. ஒப்புக் கொள்ளாததினால் நஷ்டம் முஸ்லிம் லீக்குக்கும் ஜனாப் ஜின்னாவுக்குந்தான்.

மௌலானாவின் கருணை

உண்மையில், மௌலானா ஆஸாதின் காரியம் காங்கிரஸ் வாதிகளிலேயே முக்கால் வாசிப் பேருக்குச் சம்மதமாயிராது. காங்கிரஸ் சட்ட திட்டத்தை முன்னிட்டுத்தான் அவர்கள் வாயை மூடிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். ஏனெனில், முஸ்லிம் லீக் சமீபகாலத்தில் காங்கிரஸுக்கும் தேசிய இயக்கத்துக்கும் எவ்வளவு விரோதம் செய்திருக்கிறது என்பதைக் காங்கிரஸ் வாதிகள் மறந்திருக்க முடியாது. ஜனாப் ஜின்னா காங்கிரஸின் மீதும் காங்கிரஸ் தலைவர்கள் மீதும் முக்கியமாக மகாத்மா காந்தி, மௌலானா ஆஸாது இவர்கள் மீதும் பொழிந்திருக்கும் வசைமாரியை யாரும் மறந்திருக்க முடியாது.

காங்கிரஸ் வாதிகள் என்றைய தினம் மந்திரி சபைகளைக் கைவிட்டார்களோ அன்று முதல் முஸ்லிம் லீக்கின் பலம் அதிகமாகி வந்தது. மறுபடியும் காங்கிரஸ் வாதிகள் இப்போது மாகாண மந்திரி சபைகளைக் கைப்பற்ற முன்வந்திருக்கிறார்கள்; எனவே, லீக்கின் பலமும் குன்ற ஆரம்பித்து விட்டது. மௌலானா ஆஸாதே கருணை கொண்டு லீக்கைக் காப்பாற்ற முயன்றாலும் அது முடிகிற காரியமாகத் தோன்றவில்லை.

"பாரதிதாஸன்" நிதி

மகாகவி பாரதியாரின் அன்புக்குப் பாத்திரமான சீடரும், தமிழ் மறுமலர்ச்சிக் கவிகளில் ஒருவரும், தீவிர சமூகப் புரட்சி யாளருமான "பாரதிதாசன்" அவர்களுக்கு ஒரு நிதி முடிப்புத் தர வேண்டுமென்று சிலகாலத்துக்கு முன்பு முயற்சி தொடங்கப்பட்டது. மேற்படி முயற்சி தற்சமயம் தமிழ் மக்களின் ஆதரவை இழந்திருக்கும் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சிலரால் தொடங்கப் பட்டதாகத் தோன்றியபடியால், பொது மக்களிடையே அவ்வளவு உற்சாகத்தை உண்டாக்கவில்லை. அந்தக் குறையை நீக்கும் பொருட்டுச் சமீபத்தில் சர்வ கட்சிக் கூட்டம் ஒன்று நடந்ததைப் பற்றிப் பத்திரிகைகளில் படித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். அந்தக் கூட்டத்துக்குப் பிறகு, நிதி வசூல் சுறுசுறுப்பு அடைந்து தற்சமயம் ரூ. 2073—8—0 வசூலாகி யிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வோரை அரசியல் கட்சி வித்தியாசம் இன்றி ஆதரித்துப் பாராட்ட வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். "பாரதிதாசன்" நிதிக்கு இனி மேலும் மேலும் துரிதமாகப் பணம் சேர்ந்து பெருந்தொகை யாகுமென்று எதிர்பார்க்கிறோம். மேற்படி நிதிக்குப் பணம் உதவ விரும்புவோர் ஸ்ரீ சி. என். அண்ணாதுரை எம். ஏ., பொருளாளர், கவிஞர் பாரதிதாசன் நிதிக் கமிட்டி, காஞ்சீபுரம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

இலங்கை அன்பர்களுக்கு

ஸ்ரீ வ. உ. சி. ஞாபகார்த்த நிதியின் காரியதரிசி ஸ்ரீ பி. கந்தசாமிப் பிள்ளை, பொக்கிஷதார் ஸ்ரீ ஏ. பி. சி. வீரபாகு, ஸ்ரீ ஜே. பி. ராடரிக்ஸ் ஆகியவர்கள் இந்த வாரத்தில் இலங்கைக்கு வருகிறார்கள். வ. உ. சி. நிதிக்குப் பணம் திரட்டுவதற்காகத்தான் வருகிறார்கள். மேற்படி நிதி வசூல் விஷயத்தில் இலங்கையில் உள்ள தேசபக்தி மிகுந்த தமிழர்கள் அவர்களுக்குப் பூரண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் கப்பலோட்டியது தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் இடையிலேதான் என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டால், அந்த மகா வீரரின் ஞாபகார்த்த முயற்சியில் பூரணமாய் ஈடுபடுதல் இலங்கைத் தமிழர்களின் உரிமையும் கடமையும் ஆகும் என்பது தெரியவரும். எட்டயபுரத்தில் பாரதியார் ஞாபகார்த்தம் ஏற்படுத்தும் முயற்சியில் இலங்கையிலுள்ள தமிழர்கள் மிக்க ஊக்கம் கொண்டு நிதி வசூலித்து அனுப்பினார்கள். அவ்விதமே வ. உ. சி. நிதி விஷயத்திலும் அவர்கள் உற்சாகமாக ஈடுபட வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

வாழ்க சுதந்திரம்!!

நூற்றைம்பது வருஷங்களுக்குப் பிற்பாடு பிரிட்டிஷ் சர்க்காருடைய மனப்பான்மையில் ஒரு மாறுதலைக் காண்கிறோம்.

அந்த மாறுதல் சாமானியமானதல்ல.

புரட்சிகரமான, பயங்கரமான, மயிர் சிலிர்க்க வைக்கும் மாறுதல்.

நாற்பதுகோடி கறுப்பு மக்களாகிய இந்தியர்கள் சுதந்திரம் கேட்பதற்கும் பெறுவதற்கும் உரிமை உண்டு என்பதை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

இந்தியர்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும் உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

நாம் இஷ்டப்பட்டால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருக்கலாமாம்.

இல்லாவிட்டால் பிரிந்து தனியாகவும் போகலாமாம்.

இத்தனை விஷயங்களையும் பிரிட்டிஷ் சர்க்கார் சார்பாக, பிரிட்டிஷ் பிரதம மந்திரி மேஜர் கிளெமெண்ட் ஆட்லியே சொல்லியிருக்கிறார்.

சொன்னது மாத்திரம் அல்ல; அதைச் செயலிலே கொண்டு வருவதற்கும் பிரயத்தனம் தொடங்கியிருக்கிறார்.

இந்தியர்களைக் கலந்து கொண்டு இந்தியாவின் சுதந்திரத்தை ஸ்தாபித்துவிட்டு வருவதற்காக மூன்று மந்திரிகளை இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

ஒருவர் இந்தியா மந்திரி; இன்னொருவர் கடற்படை மந்திரி; மற்றொருவர் நம்முடைய பழைய நண்பர் சர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ். மூன்று மந்திரிகளும் இங்கிலாந்திலிருந்து ஆகாச மார்க்கமாகக் கிளம்பிச் சௌக்யமாக இந்தியா வந்து சேர்ந்து விட்டார்கள். அவர்கள் வரவு நல்வரவாகுக.

• • •

இந்தியா பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வந்த பிறகு, பிரிட்டனிலிருந்து எத்தனை எத்தனையோ தூதுகோஷ்டிகள் வந்திருக்கின்றன.

அவர்கள் செய்த காரியமெல்லாம், இந்தியாவின் சுதந்திரத்துக்கு இடையூறுகளைக் கண்டுபிடித்து, சுதந்திரத்தைத் தள்ளிப் போட்டதேயாகும்.

எனவே, பிரிட்டனிலிருந்து தூது கோஷ்டி வருகிற தென்றாலே இந்திய மக்கள் அவநம்பிக்கையும் சந்தேகமும் கொள்வது இயல்பாகி விட்டது.

ஆனால், அந்த அவநம்பிக்கையையும் அதிருப்தியையும் இப்போது ஒதுக்கி வைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது போலத் தோன்றுகிறது.

இந்தத் தடவை வரும் தூதுகோஷ்டியினர் இந்தியப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்க்கலாம் என்பதற்குப் பல சுப சூசகங்கள் தெரிகின்றன.

அவற்றில் மிக முக்கியமானது மைனாரிட்டி மெஜாரிட்டி விஷயத்தைப் பற்றி மேஜர் ஆட்லி சென்ற வாரத்தில் பார்லிமெண்டில் தெரிவித்ததாகும்.

* * *

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு இதுவரையில் குறுக்கே நின்ற முக்கியமான முட்டுக்கட்டை பிரிட்டிஷ் சர்க்கார் தான் என்று சொல்லவேண்டியதில்லை.

மேற்படி திவ்ய கைங்கரியத்துக்கு பிரிட்டிஷார் இந்தியாவிலுள்ள மைனாரிட்டி சமூகங்களைப் பெரிதும் பயன் படுத்திக் கொண்டார்கள்.

இந்தியாவிலே பூரண சமூக ஒற்றுமை ஏற்பட்டாலொழியச் சுதந்திரம் கொடுக்க முடியாது என்று சொல்லி வந்தார்கள்.

அதன் காரணமாக, மூலை முடுக்குகளி லிருந்தெல்லாம் புதிய புதிய கோஷ்டிகள் கிளம்பி, மைனாரிட்டி என்ற பெயரைச் சொல்லிக் கொண்டு இந்திய சுதந்திரத்துக்குக் குறுக்கே நிற்கத் தொடங்கினார்கள். எனவே, இந்தியாவில் மெஜாரிட்டியைக் காட்டிலும் மைனாரிட்டிகளுக்கு அளவு கடந்த பலமும் செல்வாக்கும் அதிகாரமும் உண்டாயிற்று.

அன்று பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுடைய சுயநல ஏகாதிபத்தியப் பிடிப்

பிற்காக மைனாரிட்டி சமூகங்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஆனால், இன்று அவர்கள் உலக நிலைமையை முன்னிட்டு இந்திய விவகாரத்தை ஒழுங்கு படுத்த எண்ணும் போது, பஸ்மாசுரனைப் போல, வரங் கொடுத்தவர்களின் தலை மேலேயே மைனாரிட்டிகள் கை வைக்க முன் வருகிறார்கள்.

தாங்கள் சம்மதித்தா லொழிய இந்தியாவுக்குச் சுதந்திரம் கொடுக்கக்கூடாதென்று மிரட்டுகிறார்கள்.

சென்ற வாரம் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மேஜர் ஆட்லி பேசும்போது மேற்படி பஸ்மாசுர மைனாரிட்டி கோஷ்டிகளின் தலையில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டார்.

''மைனாரிட்டியினர் மெஜாரிட்டியின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு நாம் அனுமதிக்கக் கூடாது'' என்றார்.

மேற்படி கொள்கையைத் தூது கோஷ்டியார் உறுதியாகக் கடைப்பிடிக்கும் பட்சத்தில், இந்தியப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு ஒரு பெரிய தடை, — முக்கியமான தடை,—நீங்கி விடும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

இங்கே இந்தியாவிலேயும் தூது கோஷ்டியின் வெற்றிக்குச் சாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

மாகாணத் தேர்தல்களின் பயனாக, முஸ்லிம் லீக்கின் முட்டுக்கட்டை பலம் ரொம்பவும் குறைந்து போயிருக்கிறது.

உண்மையில், முஸ்லிம் லீக்கின் பலமெல்லாம் காங்கிரஸ்காரர்கள் ஏற்கெனவே கோட்டையை விட்டதனால் ஏற்பட்ட போலி பலமே என்பது இப்போது நன்கு வெளியாகி யிருக்கிறது.

மகாத்மா காந்தி மன்றாடிக் கேட்டுக் கொண்டபோது சமரசத்துக்கு வர மறுத்த காயிதே ஆஜம் ஜின்னா இப்போது தமது தவறை மனதுக்குள்ளே உணர்ந்துதா னிருக்க வேண்டும்.

மரத்தின் உச்சாணிக் கிளையிலேயே உட்கார்ந்திருப்பதில் பயனில்லை யென்றும் இறங்கி வந்துதான் தீர வேண்டுமென்றும் ஜனாப் ஜின்னா இப்போது அறிந்திருக்க வேண்டும்.

இதெல்லாம் ஓரளவு அவர் பேச்சுகளிலிருந்து வெளியாகிறது! மௌலானா ஆஸாதின்மீது வரம்பு கடந்து அவர் வசை மொழி பொழிவதிலும் வெளியாகிறது; பிரிட்டிஷார் விஷயத்தில் 'நயிச்ச' முறையைக் கையாண்டு அவர் பேசுவதிலும் வெளியாகிறது.

ஆனால் ஜனாப் ஜின்னா இறங்கி வந்தாலும் வராவிட்டாலும், காரியம் என்னமோ நடந்துதான் தீரவேண்டும்.

இந்தத் தடவை வந்திருக்கும் மந்திரிகள் ஏதாவது ஒரு சமரச ஏற்பாடு செய்யாமல் திரும்பிப் போக விரும்ப மாட்டார்கள்; என்பது நிச்சயம்.

ஆனால் விஷயம் வெற்றிகரமாக முடிவது, அதாவது இந்திய சுதந்திரக் கோரிக்கை பூரண வெற்றி யடைவது நமது மதிப்பிற்குரிய காங்கிரஸ் தலைவர்களின் இராஜ தந்திர சாமர்த்தியத்தையும் பொறுத்திருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

1942-ல் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் மட்டும் வந்திருந்த சமயத்தில் மேற்படி அம்சத்தில் பல தவறுகள் நேர்ந்தன.

இந்தத் தடவை அப்படியெல்லாம் நேராது என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன.

தூதுகோஷ்டி வந்து சேர்வதற்கு முன்னாலேயே காரியக் கமிட்டித் தலைவர்கள் கூடி, தூதுகோஷ்டியுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்குப் பிரதிநிதிகளைப் பொறுக்கி யிருக்கிறார்கள்.

ஸ்ரீயுத வல்லபாய், பண்டித ஜவாஹர்லால், மௌலானா ஆஸாது ஆகியவர்களின் பேச்சுக்களிலே சமரசத்தின் ஆசையும் நல்ல முடிவில் நம்பிக்கையும் ததும்பிக் கொண்டிருக்கின்றன.

இப்படியாக, எல்லாப் பக்கங்களிலும் தூது கோஷ்டியின் வெற்றிக்குரிய சுப சகுனங்களையே காண்கிறோம்.

* * *

இந்தியாவுக்குப் போகும் மூன்று மந்திரிகளின் தூது பலிக்க வேண்டுமென்பதற்காக பிரிட்டனிலுள்ள ஒவ்வொருவரும் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று பிரிட்டிஷ் காண்டர்பரி ஆர்ச்பிஷப் வேண்டிக் கொண்டிருக்கிறார்.

நாமும் அந்தப் பிரார்த்தனையிலே மனமாரக் கலந்து கொள்கிறோம்.

வந்தேமாதரம்!
வாழ்க சுதந்திரம்!!

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: டி. என். பஞ்சாபகேசன், கோலார்.

வான சஞ்சாரம்

இசைத்தேனீ

நமது சீனியர் வித்வான்களில் எளிதில் கவர்ச்சி கொடுக்கும் நாதப் பொழிவுள்ள சாரீரம் படைத்தவர் செம்மை வைத்தியநாதய்யர். 18உ சென்னையில் நடந்த அவரது கச்சேரி வழக்கம்போல் ஜோரா யிருந்த தென்பது சொல்லத் தேவையில்லை. மாயாமாளவ கௌளை, காம்போதி, ஆரபி, ஷண்முகப்ரியா, ஸிந்துபைரவி என்று பல ராகங்களைத் தாராளமாய்ப் பாடினார். 'இந்தபராக' 'வசிஜுதன' கிருதிகளும் அவைகளின் நிரவல் ஸ்வரங்களும் உருட்டல் புரட்டல்களுடன் அமோகமாயிருந்தன. அடிக்கடி 'சபாஷ்' கொடுத்துப் பக்க வாத்தியங்களை உற்சாகப் படுத்தும் மேடைப் பழக்கத்தை ரேடியோவிலும் கையாண்டார்.

பாவத்தையே முதன்மையாகக் கொண்டு பாடும் வித்வான்களில் எம். எம். தண்டபாணி தேசிகர் ஒருவர். சென்னையில் 16உ கேட்ட அவரது கச்சேரியில் பைரவி விஸ்தாரமாயும் அருமையான பாவ சங்கதிகளுடனும் உருக்கமாக இருந்தது. தன்யாசியை அடுத்ததாகச் சொல்லலாம். ராகமாலிகை வழக்கம்போல் உணர்ச்சி ததும்பி யிருந்தது.

12உ சென்னையில் டி. கே. பட்டம்மாள் ராகம், தானம், பல்லவிக் கச்சேரி செய்தார். கரஹரப்ரியா நிதானமாயும் ஸ்படிகம் போன்ற தெளிவு சஞ்சாரங்களுடனும் வனப்பாய் இருந்தது. 'சரவண பவ குகனே' என்ற பல்லவியில் அவருக்கு இயல்பான லயச் சிறப்புக் கண்டது. தானம் பாடுவதில் இன்னும் மேன்மை யடைய இடம் உண்டு.

• • •

சென்னையில் 12உ எம். ஜி. கௌரி குமாரியின் வீணைகானம் குறிப்பிடத்தக்கது. மிருதுவான மீட்டும், கமகப் பொழிவும் கொண்டு ஜகன்மோஹினியும் சங்கராபரணத்துடன் வாசித்த ராகமாலிகையும் நிதானமாயும் அழகாயு மிருந்தன.

13உ திருச்சியில் எம். எஸ். மோஹனாம்பாள் நடுத்தரக் குரலில் பந்துவராளி, காம்போதி ராகங்களையும் அந்த ராகங்களில் உருப்படிகளையும் நிறம்படக் கையாண்டார்.

14உ சென்னையில் ஏ. எஸ். அனந்த கோபாலனின் பாட்டு கவனத்தை யிழுத்தது. பூர்ணசந்திரிகா, தோடி ராகங்களிலிருந்தும் 'தாயே யசோதா' உருப்படியின் நிரவல் ஸ்வரங்களிலிருந்தும் அவரது ஞானமும் தேர்ச்சியும் நன்கு வெளிப்பட்டன.

15உ திருச்சியில் டி. என். ஸுப்ரமணிய பிள்ளை நய சாரீரத்தில் நல்வழியுடன் நடபைரவி ராகத்தை ஆலாபனை செய்தது மனம் கவர்ந்தது.

16உ சென்னையில் நந்துலா ஸ்ரீராமமூர்த்தி ஞானச் சிறப்புடனும் அரிய சாதகத்துடனும் தோடியையும் 'எந்துகு தயராது' கிருதியையும் விமரிசையாய்ப் பாடினார்.

அன்று அதே நிலையத்தில் எம். எஸ். சிவராஜ அய்யர் நய சாரீரமும், பிர்க்காப் பொழிவுடன் நிதானமும், ஒழுங்கு பாணியும் கொண்டு பிலஹரி, பந்துவராளி ராகங்களையும் அவைகளின் கிருதிகளையும் வனப்பாய் வழங்கினார்.

17உ திருச்சியில் கேட்ட கமலா கிருஷ்ணமூர்த்தியின் ஒருமணி நேரக் கச்சேரி, உயர்ந்த ரகமா யிருந்தது. இனிமை நிறைந்த நீக்கக் குரலில் பூர்வி கல்யாணி, ஆபேரி, சுபபந்துவராளி, மோஹனம், யதுகுலகாம்போதி என்று ராகங்களை அமோகமாய்ப் பொழிந்தார். 'நகுமோமு', 'ராகவனே' உருப்படிகள் அழகாயிருந்தன.

அன்று சென்னையில் பாடிய எம். எஸ். செல்வப் பிள்ளை அய்யங்காரின் ஒரு மணி நேரக் கச்சேரியும் குறிப்பிடத் தக்கது. நடுத்தர சாரீரத்தில் நல்ல ஞானபாவத்துடன், கௌளை, ஸுராங்கி, தேவமனோஹரி ராகங்களையும் உருப்படிகளையும் நற்சொரூபங்களாய்ச் சித்திரித்தார்.

18உ திருச்சியில், மதுரை பி. எம். வெங்கட கிருஷ்ணன், பௌளி, தோடி, கல்யாணி ராகங்களையும் 'உண்டேதி', 'நின்னுவினா' உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்களையும் தேர்ச்சியாய் வழங்கினார்.

அன்று சென்னையில் பாடிய லால்குடி ஹாலாஸ்யம், நய சாரீரமும் நானுக்கு வழியும் கொண்ட இளம் பாடகர். நாட்டக்குறிஞ்சி சிறப்பா யிருந்தது. ஹிந்தோளம், கரடி ராகங்களும் அவர் திறமையை விளக்கின.

சிவகாமியின் சபதம்

கல்கி

அத்தியாயம் 29

மகேந்திரர் சொன்னார்!

சிவகாமி விம்மி ஓய்வதற்குச் சிறிது நேரம் கொடுத்துவிட்டுக் குண்டோதரன், "தாயே! தென் தமிழ் நாட்டில் 'ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப் பொறுக்கவில்லையா?' என்று ஒரு பழமொழி உண்டு. தாங்களும் ஒரு வேளை கேள்விப் பட்டிருப்பீர்கள். இத்தனை நாள் பொறுத்திருந்தவர்கள், காரிய சித்தியடையப் போகும் சமயத்தில் பொறுமை இழக்கலாமா?" என்றான்.

"குண்டோதரா! எனக்கா நீ பொறுமை உபதேசம் செய்கிறாய்? ஒன்பது வருஷ காலம் பகைவர்களின் நகரில் நிர்க்கதியாய் நிராதரவாய் உயிரை வைத்துக் கொண்டிருந்தவளுக்கா பொறுமையை உபதேசிக்கிறாய்?" என்று சிவகாமி கொதிப்புடன் கேட்டாள்.

"தாயே! தங்களுக்குப் பொறுமை உபதேசிக்கவில்லை. என்னுடைய சக்தியின்மையைத்தான் அவ்விதம் வெளியிட்டேன். இராமாயண கதையில் இன்னொரு கட்டத்தைத் தங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அசோக வனத்தில் சீதையைக் கண்ட அனுமார் பிராட்டியைத் தன்னுடன் புறப்பட்டு வந்து விடும்படி. கோரினார். இராமரிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்த்து விடுவதாகச் சொன்னார். ஆனால் சீதாதேவி அனுமாருடன் வருவதற்கு மறுத்து விட்டார்......!"

"குண்டோதரா! சீதாதேவியின் உபமானத்தை எதற்காகச் சொல்கிறாய்? நான் சீதாதேவி அல்ல; மிதிலையை ஆண்ட ஜனக மகாராஜாவின் புத்திரி அல்ல. ஏழைச் சிற்பியின் மகள் நான்..."

"தேவி! நானும் அனுமார் அல்ல. உருவத்தில் ஏதோ ஓரளவு அந்த இராம தூதனை ஒத்திருக்கிறேன்! ஆனால் அவருடைய சக்தியிலே லட்சத்தில் ஒரு பங்கு கூட எனக்குக் கிடையாது. இந்த வாதாபி நகரத்தைத் தனியாகக் கொளுத்தி எரித்து விட்டுத் தங்களை அழைத்துப் போகும் சக்தி எனக்கு இல்லையே! என் செய்வேன்?"

"ஆ! மறுபடியும் என் பாழும் சபதத்தைக் குறிப்பிடுகிறாய். அதைத்தான் நான் கைவிட்டு விட்டேன் என்று சொன்னேனே? என்னை உன்னோடு அழைத்துப் போகும்படிதானே சொல்கிறேன்?......"

"அம்மா! இதே வீட்டில் இதே இடத்தில் நின்று, மாமல்லர் தம்முடன் வந்துவிடும்படி தங்களை வருந்தி வருந்தி அழைத்தார். தாங்கள் பிடிவாதமாக மறுத்து விட்டீர்கள். 'என் சபதத்தை நிறைவேற்றி விட்டு என்னை அழைத்துப் போங்கள்' என்றீர்கள். அதையெல்லாம் நான் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தேன். இப்போது மாமல்லர் சபதத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார். தேவி! நாளை விஜயதசமியன்று கிளம்புவதற்கு நாள் பார்த்திருக்கிறது. எல்லாம் உத்தேசப்படி நடந்தால் சரியாக இன்னும் ஒரு மாதத்துக்குள் வாதாபி கோட்டையைப் பல்லவ சைன்யம் சூழ்ந்து முற்றுகை இடும். தங்கள் கண் முன்னால் தங்களுடைய சபதம் நிறைவேறுவதைப் பார்ப்பீர்கள். அதைரியத்துக்கு இடங் கொடுக்காமல் இன்னும் சிறிது காலம் இருங்கள்......"

"குண்டோதரா! நான் சொல்வதை நீ புரிந்து கொள்ளவில்லை. என் மனதையும் நன்றாய் அறிந்து கொள்ளவில்லை. அதைரியத்தினாலோ, அல்லது பொறுமை இழந்தோ நான் பேசவில்லை. எனக்காக இன்னொரு பயங்கர யுத்தம் நடப்பதைத் தடுக்க விரும்பு

கிறேன். என் வாழ்க்கையில் நான் அநுபவித்ததெல்லாம் போதாதா? அந்த சமயம் ஏதோ ஆத்திரமாயிருந்தது; அதனால் அப்படிச் சபதம் செய்து விட்டேன். இப்போது நினைத்துப் பார்த்தால், அது மூடத்தனம் என்று தோன்றுகிறது. யுத்தம் என்றால் என்னென்ன பயங்கரங்கள் நடக்கும்? எத்தனை பேர் சாவார்கள்? எத்தனை குற்றமற்ற ஜனங்கள் கஷ்டங்களுக்கு உள்ளாவார்கள்? வெற்றி தோல்வியைப் பற்றித்தான் நிச்சயம் என்ன சொல்ல முடியும்? இந்தத் துரதிர்ஷ்டக்காரியின் மூடப் பிடிவாதத்துக்காக அம்மாதிரி கஷ்டங்கள் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அதனால்தான் என்னை உன்னோடு அழைத்துப் போகச் சொல்லுகிறேன்!" என்றாள் சிவகாமி.

இதற்கு என்ன மறுமொழி சொல்வது என்று தெரியாமல் குண்டோதரன் திகைத்து நின்றான். சிறிது நேரம் யோசித்து, "அம்மா! இனிமேல் தங்களுடைய சபதத்தைத் தாங்கள் மாற்றிக்கொண்ட போதிலும் மாமல்லர் வாதாபி படையெடுப்பைக் கைவிட முடியாது. மகேந்திர பல்லவர் மரணத் தறுவாயில் மாமல்லருக்கு இட்ட கட்டளையை அவர் நிறைவேற்றியே தீருவார்!" என்றான்.

"ஆ! மகேந்திர பல்லவர் என்ன கட்டளையிட்டார்?" என்று சிவகாமி கேட்டாள்.

"ஆயனச் சிற்பியின் மகள் செய்த சபதத்தை எப்படியாவது நிறைவேற்றியே தீரவேண்டும் என்று கட்டளையிட்டார்! வாதாபியைச் சுட்டு எரித்துச் சிவகாமி தேவியைக் கொண்டு வந்தால்தான் பல்லவ குலத்துக்கு நேர்ந்த அவமானம் தீரும் என்று வற்புறுத்திக் கூறினார். அதற்காக இடைவிடாத பிரயத்தனம் செய்யும்படி மாமல்லரையும் மந்திரிமார்களையும் கேட்டுக் கொண்டார்!" என்று குண்டோதரன் கூறியதும், "ஆகா! சக்கரவர்த்திக்கு என் பேரில் அவ்வளவு கருணை இருந்ததா! அவரைப் பற்றி என்னவெல்லாம் நான் தவறாக எண்ணினேன்?" என்று கூறிச் சிவகாமி மறுபடியும் கண்ணீர் விட்டாள்.

பிறகு, மகேந்திர பல்லவரின் மரணத்தைப் பற்றியும் இன்னும் காஞ்சியில் சென்ற ஒன்பது வருஷமாக நடந்த சம்பவங்களைப் பற்றியும் விவரமாகச் சொல்லும்படி கேட்டாள்.

குண்டோதரன் எல்லா சம்பவங்களையும் பற்றிக் கூறினான். ஆனால் ஒரு சம்பவத்தைப் பற்றி மட்டும் அவன் பிரஸ்தாபிக்கவே இல்லை. அதைப் பற்றிச் சொல்ல அவனுக்குத் துணிச்சல் ஏற்படவில்லை.

• • •

குண்டோதரன் விடைபெற்றுக் கிளம்ப வேண்டிய சமயம் வந்தபோது, சிவகாமி ஏக்கம் நிறைந்த குரலில், "அப்பனே! மாமல்லர் நிச்சயம் வருவாரா? அல்லது எனக்கு வீண் ஆசை காட்டுகிறாயா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக வருவார், அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக அவசியம் வந்தே தீர்வார்!" என்றான் குண்டோதரன்.

"உண்மைதான்; பல்லவ குலத்தின் கௌரவந்தான் அவருக்குப் பெரிது. அதற்காகத்தான் இவ்வளவு காலம் கழித்து வருகிறார். என் பேரில் உள்ள அன்புக்காக வருவதாயிருந்தால், முன்னமே வந்து என்னை அழைத்துப் போயிருக்க மாட்டாரா?" என்றாள்.

குண்டோதரன் தன் மனதிற்குள், "ஆ! ஸ்திரீகளைத் திருப்தி செய்வது மிகவும் கடினமான காரியம். இப்படித் திருப்தி செய்ய முடியாத ஸ்திரீகளுக்காகச் சிலர் இத்தனை சிரமம் எடுத்துக் கொண்டு இப்படி உயிரை விடுகிறார்களே? என்ன பைத்தியக்காரத்தனம்?" என்று எண்ணினான்.

பிறகு, "அம்மா! பல்லவ குலத்தின் கௌரவத்தைக் காட்டிலும் தங்களுடைய அன்பே பெரிதென்று கருதி மாமல்லர் இங்கு ஒருநாள் மாறுவேடத்தில் வரவில்லையா? அவருடன் புறப்பட்டு வந்து விடும்படி தங்களை எவ்வளவோ மன்றாடி வேண்டவில்லையா?" என்று வெளிப்படையாகக் கேட்டான்.

"ஆம்; குண்டோதரா! அப்போது நான் செய்தது பெரிய தவறுதான். அந்தத் தவறுக்காக ஒன்பது வருஷம் என்னைத் தண்டித்தது போதும் என்று மாமல்லரிடம் சொல்லு!

அவரை மீண்டும் ஒரு முறை பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்காகத்தான் இத்தனை நாள் நான் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றும் சொல்லு!" என்றாள் சிவகாமி.

நல்ல வேளையாக, அந்தப் பேதை தனக்கு இன்னும் எவ்வளவு கடூரமான தண்டனைகள் காத்திருக்கின்றன என்பதை அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால், எந்தக் காரணத்துக்காக வேணும் உயிரை வைத்துக் கொண்டிருக்க உடன்பட்டிருக்கக் கூடுமா?

* * *

குண்டோதரன் கடைசியாகப் புறப்பட வேண்டிய சமயத்தில் தயங்கித் தயங்கி நின்றான். அவனைப் பார்த்தால் ஏதோ சொல்ல விரும்பியவன் போலவும் அதற்குத் துணிச்சல் வராமல் சங்கடப்படுவதாகவும் தோன்றியது.

சிவகாமி அவனைத் தைரியப்படுத்தி, "இன்னும் ஏதாவது சொல்வதற்கு இருக்கிறதா? தயங்காமல் சொல்லு!" என்றாள்.

"தேவி! வேறு ஒன்றுமில்லை. 'ஸ்திரீகளிடம் இரகசியம் தங்காது' என்பதாக ஒரு வழக்கு உண்டு. மகாபாரதத்திலேகூட அந்த மாதிரி ஒரு கதை இருக்கிறது. அம்மா! கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வந்துபோன விஷயமோ, மாமல்லர் படையெடுத்து வரும் விஷயமோ இங்கே பிரஸ்தாபம் ஆகக் கூடாது!" என்றான்.

சிவகாமியின் முகத்தில் சோகம் கலந்த புன்னகை அரும்பியது.

"குண்டோதரா! மாமல்லருக்கு இத்தனை நாளும் என்னால் ஏற்பட்ட சங்கடமெல்லாம் போதாதா? இந்த வஞ்சகப் பாதகர்களிடம் இன்னமும் அவரை நான் காட்டிக் கொடுப்பேனா? இங்கே எனக்குத் தெரிந்தவர்கள், நாகநந்தி பிக்ஷுவைத் தவிர யாரும் இல்லை. அவரும் அஜந்தாவுக்குப் போகிறார். ஆகையால் நீ கவலையில்லாமல் திரும்பிச் செல்!" என்றாள்.

பிறகு, "குண்டோதரா! நீ உன்னை அனுமார் என்று சொல்லிக் கொண்டாய். அந்தப் பெயருக்குத் தகுதியாக நடந்து கொள். மாமல்லரை விட்டு ஒரு க்ஷணமும் பிரியாமல் இருந்து அவரைக் காப்பாற்று! இந்தப் பாவிகள் நெஞ்சிலே விஷம் உள்ளவர்கள்; விஷத் தோய்ந்த கத்தி எறிந்து கொல்கிறவர்கள். ஐயோ! என்னுடைய மூடப் பிடிவாதத்தினால் அவருக்கு மறுபடியும் ஆபத்து வரவேண்டுமா?" என்றாள்.

சிவகாமி ஏன் யுத்தத்தை விரும்பவில்லை என்பது அப்போதுதான் குண்டோதரனுக்குத் தெளிவாயிற்று. மாமல்லருக்குப் போர்க்களத்தில் ஏதாவது அபாயம் வரப்போகிறதே என்று அவள் கவலைப்பட்டதுதான் காரணம் என்று தெரிந்து கொண்டான். சிவகாமி தேவியிடம் அவனுடைய பக்தியும் அபிமானமும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக வளர்ந்தன.

அத்தியாயம் 30

நீலகேசி உதயம்!

குண்டோதரன் வந்து விட்டுப் போனதிலிருந்து சிவகாமியின் சித்தக் கடலில் கொந்தளிப்பு அதிகமாயிற்று. மலைபோன்ற அலைகள் எழுந்து விழுந்து நாலாபுறமும் மோதிப் பாய்ந்து அல்லோல கல்லோலம் செய்தன.

பொழுது போவது மிகவும் சிரமமாகி, ஒவ்வொரு கணமும் ஒரு முடிவில்லா யுகமாகத் தோன்றியது.

குண்டோதரன் கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வந்தாள். அவனிடம் நாம் உசிதமான முறையில் பேசினோமோ இல்லையோ என்ற சந்தேகம் அடிக்கடி தோன்றியது. மாமல்லரிடம் போய் அவன் என்ன சொல்கிறானோ என்னமோ என்ற கவலையும் அடிக்கடி ஏற்பட்டது.

மாமல்லர் வரப் போவது பற்றிய இரகசியத்தை வெளியிட்டு விடவேண்டாம் என்று குண்டோதரன் தனக்கு எச்சரிக்கை செய்ததைப் பற்றி நினைத்துக் கொண்டபோது மட்டும் சிவகாமி

யின் சோகம் குடிகொண்ட வதனத்தில் புன்னகை தோன்றிற்று.

ஆயினும், அந்த எச்சரிக்கை எவ்வளவு அவசியமானது என்பது வெகு சீக்கிரத்திலேயே அவளுக்குத் தெரிய வந்தது.

* * *

குண்டோதரன் வந்து சென்ற மூன்றாம் நாள் வாதாபி நகரம் அளவில்லாத அல்லோல கல்லோலத்துக்கு உள்ளாகியிருந்தது. அன்றையதினம் புலிகேசி சக்கரவர்த்தி அஜந்தா கலை விழாவுக்காகப் பிரயாணமாகிறார் என்பதும், பக்கத்திலுள்ள இராஜ வீதி வழியாக அவருடைய ஊர்வலம் போகும் என்பதும் சிவகாமிக்குத் தெரிந்திருந்தது. தன் வீட்டுப் பலகணியின் வழியாகவே மேற்படி ஊர்வலக் காட்சியைக் காணலாம் என்றும் அவள் அறிந்திருந்தாள்.

கடைசியாக, பிற்பகலில் மூன்றாவது ஜாமத்தில் சக்கரவர்த்தியின் பிரயாண ஊர்வலம் வந்தது.

பட்டத்து யானை மீது புலிகேசி சக்கரவர்த்தி கம்பீரமாக வீற்றிருந்தார். அவருக்குப் பின்னால் சிவிகைகளில் நாகநந்தி பிக்ஷுவும் சீன யாத்திரீகரும் சென்றார்கள்.

அழகிய தங்க ரதத்தில் சக்கரவர்த்தியின் இளம் புதல்வர்கள் மூவரும் அமர்ந்திருந்தார்கள்.

இன்னும், சக்கரவர்த்தி முன்னாலும் பின்னாலும் சாம்ராஜ்யத்தின் பிரதான அமாத்தியர்கள், மந்திரிமார்கள், சாமந்தர்கள், சேனா நாயகர்கள் முதலியோர் பலவித வாகனங்களில் பெருமிதத்துடன் அமர்ந்து சென்றார்கள்.

பொது ஜனங்களின் கோலாகல கோஷங்களோடு வாத்திய முழக்கங்களும் சேர்ந்து காது செவிடு படும்படி செய்தன.

இதையெல்லாம் பார்த்த சிவகாமிக்குக் காஞ்சியில் மகேந்திர பல்லவர் மாமல்லபுரத்துக் கலை விழாவுக்குக் கிளம்பும் காட்சி நினைவுக்கு வந்தது. ஆகா! முன்னொரு காலத்தில் இந்தப் புலிகேசி எத்தகைய கலை உணர்வே இல்லாத மூர்க்கராயிருந்தார்? இப்போது எப்பேர்ப்பட்ட மாறுதல் ஏற்பட்டு விட்டது? இதற்கெல்லாம் என்ன காரணம்? — காஞ்சியைப் பார்த்து விட்டு வந்ததுதானோ?

அந்த ஊர்வலக் காட்சியைப் பிறகு நினைத்தபோதெல்லாம் சிவகாமிக்கு எரிச்சல் உண்டாயிற்று. "ஆகா! இந்தப் புலிகேசியின் ஆடம்பரமும் இறுமாப்பும் கூடிய சீக்கிரத்தில் அடங்கப் போகிறதல்லவா?" என்பதை எண்ணிய போது ஓரளவு ஆறுதல் உண்டாயிற்று.

இவர்கள் அஜந்தாவிலிருந்து திரும்பி வருவதற்குள்ளே மாமல்லர் இங்கு வந்துவிடக் கூடுமல்லவா? அதை அறிந்தவுடனே இவர்களுக்கெல்லாம் எத்தகைய திகில் உண்டாகும்?

யுத்தம் வேண்டாம் என்று தான் குண்டோதரனிடம் சொன்னது தவறு என்பதாகவும் சிவகாமிக்கு அப்போது தோன்றியது. அவளுடைய ஆத்திரத்தை அதிகப் படுத்த இன்னொரு காரணமும் சேர்ந்து கொண்டது.

பட்டத்து யானைக்குப் பின்னால் சிவிகையில் சென்ற பிக்ஷு சிவகாமி இருந்த வீட்டின் பக்கம் ஒரு கணம் முகத்தைத் திருப்பிப் பார்த்ததாகத் தோன்றியது. ஆனாலும் நாகநந்தி பிரயாணம் கிளம்புவதற்கு முன்னால் தன்னிடம் மறுபடியும் வந்து விடை பெறுவார் என்று அவள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. "ஆ! இந்தக் கள்ள பிக்ஷுவுக்கு இவ்வளவு அகங்காரமா?" என்று எண்ணி ஆத்திரத்தை வளர்த்துக் கொண்டிருந்தாள்.

எனவே, அன்று மாலை இருட்டுகிற சமயத்தில் நாகநந்தி அவள் வீட்டு வாசலில் குதிரை மீது வந்து இறங்கி உள்ளேயும் பிரவேசித்து வந்தபோது சிவகாமி எல்லையற்ற வியப்பு அடைந்தவளாய், "சுவாமி! இதென்ன? தாங்கள் அஜந்தா மார்க்கத்தில் போய்க்கொண்டிருப்பதாக அல்லவா நினைத்தேன்? போகவில்லையா, என்ன?" என்று கேட்டாள்.

"கட்டாயம் போகிறேன், சிவகாமி! அஜந்தாவில் எனக்கு மிகவும் முக்கியமான காரியம் இருக்கிறது. அதில் உனக்கும் சம்பந்தம் உண்டு. அதைப் பற்றி உன்னிடம் சொல்லி விட்டுப் போகவேண்டும் என்றுதான் திரும்பி அவசரமாக வந்தேன். இன்றிரவே

சக்கரவர்த்தி தங்கி யிருக்கும் இடம் போய்ச் சேர்த்து விடுவேன்!" என்று சொல்லி விட்டு, சிவகாமிக்குப் பேச இடங் கொடாமல், "இன்று பிற்பகலில் இந்தப் பக்கம் போன ஊர்வலத்தைப் பார்த்தாயா?" என்று கேட்டார்.

"ஓ! பார்த்தேன். மகேந்திர பல்லவர் கலைத் திருநாளுக்காகக் காஞ்சியிலிருந்து மாமல்லபுரத்துக்குப் புறப்படும் காட்சி ஞாபகம் வந்தது. ஏதேது? புலிகேசி சக்கரவர்த்தி மகேந்திர பல்லவரைக்கூடத் தோற்கடித்து விடுவார் போலிருக்கிறதே?" என்றாள் சிவகாமி.

"நிச்சயமாகத் தோற்கடிப்பார்; சந்தேகமில்லை. வாதாபி சக்கரவர்த்தி இப்போது பழைய இரத்த வெறி



கொண்ட புலிகேசி அல்ல. கலை மோகமும் ரஸிகத் தன்மையும் கொண்ட புதிய புலிகேசி" என்றார் நாகநந்தி.

"அப்படியானால் அஜந்தாவிலும் கலை விழா அமர்க்களமாய்த்தா னிருக்கும்!" என்றாள் சிவகாமி.

"அதிலும் சந்தேகமில்லை. அஜந்தாவின் புத்த பிக்ஷுக்கள் சக்கரவர்த்தியை ஒப்பற்ற முறையில் வரவேற்று உபசரிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த வைபவத்தை முன்னிட்டுப் புகழ்பெற்ற நலந்தாவிலிருந்தும் ஸ்ரீபர்வதத்திலிருந்தும் இன்னும் பல புத்த பீடங்களிலிருந்தும் ஆச்சாரிய புருஷர்கள் பலர் வந்திருக்கிறார்களாம். உனக்குத் தெரியுமோ, இல்லையோ? வாதாபி சக்கரவர்த்திக்கு இளம் பிராயத்தில் அடைக்கலம் தந்து காப்பாற்றியது அஜந்தா சங்கிராமம்தான். ஆயினும் வெகு காலம் வரையில் அஜந்தா சங்கிராமத்துக்குச் சக்கரவர்த்தி எந்த வித உதவியும் செய்யவில்லை. அதற்கு ஜைன முனிவர்கள் இடம் கொடுக்கவில்லை. இராஜாங்கத்திலிருந்து செய்யும் உதவியெல்லாம் சமண மடங்களுக்கும் சமணக் கோயில்களுக்கும் தான் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி வந்தார்கள். ஆனால் இப்போது சக்கரவர்த்தி சமண முனிவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை. சக்கரவர்த்தியின் மனம் மாறிவிட்டது. கலையே அவருடைய பிரதான மதம் ஆகி விட்டது. சமணர், பௌத்தர், சைவர், வைஷ்ணவர், சாக்தர் ஆகிய எந்த மதத்தினரானாலும், சிற்ப — சித்திரக் கலைகளை வளர்ப்பவர்களுக்கெல்லாம் இராஜாங்கத்திலிருந்து மான்யங்கள் கொடுக்க ஆரம்பித்தார். இது காரணமாக இப்போது இந்தச் சளுக்க சாம்ராஜ்யம் இந்தியாவிலேயே கலை வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. கன்னோசியையும் காஞ்சியையும் வாதாபி தோற்கடித்து விட்டது!" என்று நாகநந்தி பெருமிதத்தோடு கூறியதைச் சிவகாமி உண்மையான ஆவலோடு கேட்டுக்கொண்டு வந்தாள்.

"சிவகாமி! வாதாபி சக்கரவர்த்தியின் இந்த மன மாறுதலுக்கு யார் காரணம் என்று உனக்குத் தெரியுமா?" என்று நாகநந்தி கேட்டபோது,

"சந்தேகம் என்ன, சுவாமி! சகல கலைகளிலும் வல்ல மகா ரஸிகரான நாகநந்தி யடிகள்தான்!" என்று சிவகாமி பளிச்சென்று விடை யிறுத்தாள்.

நாகநந்தியின் முகம் ஒன்பது வருஷத்துக்கு முன்பு நாம் பார்த்தபோதிருந்ததைக் காட்டிலும் இப்போது களை பொருந்தி விளங்கிற்று. முன்னே அந்த முகத்தில் நாம் கண்ட கோரம் இப்போது கிடையாது. சிவகாமியின் மறுமொழி அவருடைய முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கி மேலும் களை பொருந்தியதாகச் செய்தது.

அத்தகைய முக மலர்ச்சியோடு கனிவு ததும்பிக் காந்த சக்தி வீசிய கண்களினால் சிவகாமியை அவர் நோக்கி, "கலைவாணி! நீ கூறியது உண்மை. இரத்த தாகமும் யுத்த வெறியும் கொண்டிருந்த புலிகேசியைக் கலை மோகம் கொண்ட ரஸிகனாகச் செய்தது நான்தான். ஆனால் அதற்கு முன்னால், என்னை அத்தகைய கலைப் பித்தனாகப் பண்ணியது யார், உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டார்.

பிக்ஷு குறிப்பிடுவது தன்னைத்தான் என்று சிவகாமி மனதிற்குள் எண்ணினாள். ஆயினும் வெளிப்படையாக "எனக்கு எப்படித் தெரியும், சுவாமி?" என்றாள்.

"ஆம், உனக்குத் தெரியாதுதான். இதுவரையில் உனக்கு நான் சொல்ல



வும் இல்லை. அஜந்தா சங்கிராமத்துச் சுவர்களிலே எத்தனையோ அற்புதச் சித்திரங்கள்,—அழியா வர்ணங்களில் தீட்டிய தெய்விக சித்திரங்கள்,— இருக்கின்றன என்று உனக்குத் தெரியுமல்லவா? அந்தச் சித்திரங்களிலே பரத நாட்டியம் ஆடும் பெண்ணின் சித்திரம் ஒன்றும் இருக்கிறது. அந்தச் சித்திரந்தான் முதன் முதலில் எனக்குக் கலை மோகத்தை உண்டாக்கிற்று. சிவகாமி! நீ அந்த அற்புதச் சித்திரத்தை என்றைக்காவது ஒரு நாள் அவசியம் பார்க்கவேண்டும்......"

"வீண் ஆசை எதற்காக? அஜந்தா அதிசயங்களைப் பார்க்கும் பாக்கியம் இந்த ஜன்மத்தில் எனக்குக் கிட்டப் போவதில்லை!" என்றாள் சிவகாமி.

"அப்படிச் சொல்லாதே! இந்தத் தடவை நீ எங்களுடன் வராததில் எனக்கும் ஒரு விதத்தில் திருப்தியே தான். ஏனெனில், இந்தத் தடவை நீ எங்களுடன் வந்தாயானால், எனக்கும் மன நிம்மதியிராது; உனக்கும் மன நிம்மதியிராது. ஆனால் காலம் எப்போதும் இப்படியேயிருந்து விடாது. சீக்கிரத்தில் மாறியே தீரும்."

நாகநந்தி இவ்விதம் சொன்னபோது, சிவகாமியின் நெஞ்சில் சுரீர் என்றது. நாகநந்தியை அவள் கூர்ந்து நோக்கி, "காலம் எப்படி மாறும்? என்ன விதத்தில் மாறும்?" என்று கேட்டாள்.

"நீ இந்தக் கூண்டிலேயிருந்து விடுதலையடைந்து வானவெளியில் உல்லாசமாகப் பாடிக்கொண்டு சஞ்சரிக்கும் காலம் வரலாம்!"

"ஒரு நாளும் இல்லை" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள் சிவகாமி.

"அப்படியானால், உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையே உனக்கு இல்லையா?" என்று நாகநந்தி கேட்டார்.

சிவகாமி பல்லைக் கடித்துச் சமாளித்துக்கொண்டு, "இல்லை; அந்த நம்பிக்கையை நான் இழந்து எத்தனையோ நாளாயிற்று!" என்றாள். ஆனால் அவளுடைய மனத்தில் பெரும் பீதியும் கலக்கமும் குடிகொண்டது. இந்த வஞ்சக பிக்ஷு ஏதாவது சந்தேகிக்கிறாரா? நம்மிடம் உண்மை அறியப் பார்க்கிறாரா? ஒரு வேளை குண்டோதரன் இவரிடம் சிக்கிக் கொண்டிருப்பானோ?

"சிவகாமி! உன்னுடைய சபதம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை நீ இழந்து விட்டாய்: — ஆனால் சபதம் நிறைவேறாமல் நீ இந்த ஊரை விட்டுக் கிளம்பவும் மாட்டாய். அப்படித்தானே?"

"ஆம், சுவாமி! அப்படித்தான்!" என்று சிவகாமி தயக்கமின்றி மறுமொழி கூறினாள். அப்போதுதான் குண்டோதரனுடைய எச்சரிக்கையை அவள் நன்றியுடன் நினைத்துக் கொண்டாள்.

"ஆகா! உன்னை இந்த கதிக்கு உள்ளாக்க ஒருநாளும் நான் உடன்படேன், சிவகாமி! நேற்றுச் சீனப் பெரியாரிடம் சொன்னது போல் செய்ய வேண்டியதுதான். மாமல்லன் வந்து உன் சபதத்தை நிறைவேற்றி வைக்காவிடில், நானே நிறைவேற்றி வைக்க வேண்டியதுதான்! இந்த நகருக்கு என் கையாலேயே நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுகிறேன்!"

"ஆ! இது என்ன பேச்சு? இந்தப் பைத்தியக்காரியின் பிடிவாதத்துக்காகத் தாங்கள் ஏன் அத்தகைய கொடிய காரியத்தைச் செய்ய வேண்டும்? வேண்டவே வேண்டாம்."

"அப்படியானால் நீயாவது உன்னுடைய அர்த்த மற்ற சபதத்தை விட்டு விட வேண்டும்."

பேச்சை எப்படியாவது மாற்றத் தீர்மானித்த சிவகாமி, "சுவாமி! என்னைப் பற்றி இவ்வளவு பேசியது போதும். தங்களைப் பற்றிச் சொல்லுங்கள். அஜந்தாவைப் பற்றிப் பேசுங்கள்!" என்றாள்.

"ஆம்; முக்கியமாக என்னைப் பற்றிப் பேசுவதற்குத்தான் வந்தேன். அஜந்தாவில் நான் புனர் ஜன்மம் எடுக்கப் போகிறேன். திரும்பி வரும்போது காவி உடை தரித்த புத்த பிக்ஷுவாக வரமாட்டேன். பட்டுப் பீதாம்பரம் அணிந்த நீலகேசி மகாராஜாவாக வருவேன்!" என்று நாகநந்தி கூறியதும், சிவகாமி வியப்புடனே அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.



புகழ் வேண்டாம்!

எஸ்.வி.எஸ்.

"புகழுடன் சிலர் பிறக்கிறார்கள்; சிலர் பிறந்தபின் புகழைச் சம்பாதிக்கிறார்கள்; சிலரைப் புகழ் தேடி வந்து அடைகிறது" என்று ஒரு கவி சொல்லியிருக்கிறார்.

நான் முதல் வகுப்பைச் சேர்ந்தவனல்ல. அதுவரைக்கும் நான் பூர்வ ஜன்மத்தில் புண்ணியம் செய்திருக்கிறேன் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது!

இரண்டாவது வகுப்பில் புகழைச் சம்பாதிக்கக் கொஞ்சம் நான் முயன்றேன். இப்போது பித்தம் தெளிந்து விட்டது. ஆகவே கடவுளுக்கு என் சாஷ்டாங்கமான நமஸ்காரம்!

மூன்றாவதுதான் சற்றுப் பயமாக இருக்கிறது! எங்கே புகழ் என்னைத் தேடி வந்துவிடுமோ என்றுதான் பயம். ஆனால் என் சக்தி கொண்ட மட்டும், என் பேனாவில் மை இருக்கும் மட்டும் போராடியே தீருவேன்!

"இவன் என்ன பைத்தியமா?—புகழை வேண்டாம் என்கிறானே?" என்று என்னை ஏற இறங்கப் பார்க்கிறீர்கள்.

யாருக்குத்தான் புகழ் பெற ஆசையில்லை? பின் நான் மட்டும் என்ன அந்த விதிக்கு விலக்கா? இல்லைதான்!

ஆனாலும் புகழை எதிர்த்துத்தான் தீருவேன் என்று முடிவு கட்டியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

ஒரு காலத்தில் புகழ் பெறுவதற்கு என்னவெல்லாம் நேர் வழிகள், குறுக்கு வழிகள் என்று யோசனை பண்ணிப் பார்த்தேன். நேர் வழிகளில் சென்று பார்த்தால் புகழை அடைவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிடும் போல் தோன்றியது. உடனே குறுக்கு வழிகள் யோசித்தேன். ஒரு பழைய கதை ஞாபகம் வந்தது.

ராமசாமி என்ற ஒருவனுக்கு (என்னைப் போல அவனும் ஒருவன்) திடீரென்று புகழ் பெற வேண்டும் என்று பட்டது. உடனே நூறு கிளிகள் வாங்கித் தினம் அதற்குப் பாடம் சொல்லிக் கொடுத்தானாம். 'ராமசாமி பெரிய மனிதன்' 'ராமசாமி பெரிய மனிதன்' என்று. இப்படி இந்த வகுப்பு ஒரு மாசம் நடத்தி விட்டு, ஒரு நாள் இரவு அத்தனை கிளிகளையும் கூட்டிலிருந்து அவன் அவிழ்த்து விட்டான். மறு நாள் காலை அவை யாவும் 'ராமசாமி பெரிய மனிதன்' 'ராமசாமி பெரிய மனிதன்' என்று சொல்லிக்கொண்டே ஊர் முழுக்கச் சுற்றினவாம். ஒரு வாரத்தில் ஊரார் எல்லாம் ராமசாமி பெரிய மனிதர் என்று எண்ண ஆரம்பித்து விட்டார்களாம். எவ்வளவு சுலபமாக நினைத்த காரியம் கைகூடி விட்டது!

இந்த யோசனையை நானும் கடைப்பிடிக்கலாமா என்று யோசனை பண்ணிப் பார்த்தேன். நூறு கிளிகள் கிடைப்பது சிரமமாக இருந்தது. அப்படிக் கிடைத்தாலும் அதற்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு வேண்டிய பொறுமையும் பயிற்சியும் எனக்குக் கிடையாது. கடைசியில், ஒரு மகத்தான யோசனை தோன்றியது. அது என்னவென்று உங்களால் சொல்ல முடி

பொய்க்கால் மோட்டார்!



ஒருவேளை மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டால், மோட்டார்களை மேற்கண்டவாறு ஓட்ட நேரிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

யுமா? முடியவே முடியாது. நான் சொல்லுகிறேன் கேளுங்கள்:

காட்டில் மேட்டில் பறந்து திரியும் கிளிகளைத் தேடிக்கொண்டு போவதற்குப் பதில் வீட்டிலும் நாட்டிலும் பழியாகக் கிடக்கும் காக்கைகளைப் பிடித்து விட்டால் காரியம் சுலபமாகக் கைகூடும்! எப்படி என் யோசனை? உடனே நான் ஒரு கணமும் வீணாக்கக் கூடாது என்று புகழுக்குக் காக்காய் பிடிக்க ஆரம்பித்து விட்டேன்.

எதுவும் உழைப்பில்லாமல் நடப்பதில்லையல்லவா?

காக்காய் பிடிப்பதற்காக ரயிலிலும், டிராமிலும், பஸ்ஸிலும் திரிந்து கொண்டிருந்தபோது ஒருநாள் என்னை ரயிலில் பஸ்ஸில் எதிலுமே ஏற விடமாட்டேன் என்று விட்டார்கள். யார்? ஸ்ரீமான் பொதுமக்கள்தான். காரணம் காந்தி மகான் சென்னைக்கு வந்திருந்ததுதான்.

நானும் காந்தியைப் பார்க்க சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன். ஆனால் காந்தி எங்கேயோ அம்பத்தூர் ஸ்டேஷனில் இறங்கி காரில் வந்தார். மதுரைக்குப் போகும் போது நான் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போனால் கிண்டிக்குப் போய் ரயில் ஏறினார். திரும்பும்போது கிண்டியில்தான் இறங்குவார் என்று அங்கே போய்க் காத்திருந்தேன். ஆனால் தாம்பரத்தில் வந்து இறங்கினார்.

இவ்வளவு தொந்தரவுகளுக்கும் மகாத்மாவை உள்ளாக்கிய இந்தப் புகழ்மேல் எனக்கு அசாத்திய கோபம் வருகிறது!

மகாத்மாவுக்கே அவ்வளவு தொந்தரவு அளிக்கும் புகழ் என்னை வேறு பிடித்துக் கொண்டு பிராணனை வாங்கப் போகிறது, சனியன் என்று அப்போதே காக்காய் பிடித்தலை விட்டு விட்டேன்.

எனக்குப் புகழ் வேண்டாம் என்றாலும் காரியம் ஆகவேண்டும் என்றால் மற்றவர்களைப் புகழத்தான் வேண்டியிருக்கிறது.

பாருங்கள், நேற்று ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் டிபனுக்கு ரவா கேஸரியும் பூரியும் பண்ணியிருந்தாள். நான் என் சிநேகிதர்களுடன் சம்பிரமமாகச் சாப்பிட்டேனே தவிர, 'நன்றாக இருக்கிறது' என்று அவள் கேட்கும் ஒரு வார்த்தை (அவள் இரண்டு வார்த்தையை ஒரு வார்த்தை என்றால் எனக்கும் அது ஒரு வார்த்தைதான்) சொல்லவில்லை. அதன் விளைவு இன்றைக்குச் சாம்பார் மட்டமாகப் போய் விட்டது! வாசனையே காணோம்! அவள் முகங்கூடச் சற்று வாட்டமாக இருந்தது! சும்மாவா சொன்னார்: புகழ் வேண்டாம் என்றாலும் புகழ மட்டும் வேண்டும் என்னும் நீதியை நமது அதிவிவேகக் கவிராயர்!

உடம்புக்கு என்ன?

பகீரதன்

வைத்தியக் கல்லூரி மாணவர்கள் சிலர் ஒன்று கூடித் தங்கள் நண்பர் ஒருவருடைய வீட்டுக்குப் போயிருந்தார்கள். அங்கே தற்செயலாக அவர்களுக்குள்ளே குழந்தைகளின் வியாதியைப்பற்றிச் சர்ச்சை ஆரம்பமாயிற்று.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு சிறு பையன் துடிக்கத் துடிக்க அழுதுகொண்டே ஓடி வந்தான். அதைப் பார்த்தவுடன் ஒரு கணம் ஒருவருக்கும் ஒன்றும் தெரியவில்லை. எல்லாரும் பையனிடம் போய் அழுகையை நிறுத்த முயற்சி செய்தார்கள். அவன் ஓயாமல் மறுபடியும் மறுபடியும் அழுதுகொண்டே இருந்தான்.

உடனே பையனைப் பரிசோதிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு மாணவன், "வயிற்றில் கொஞ்சம் வலி!" என்று சொன்னான். ஒரு மாணவி, "இல்லை, வயிறு எல்லாம் சரியாக இருக்கிறது. ஹிருதயத்தில்தான் ஏதோ வலி போலிருக்கிறது!" என்று சொல்லி, பையனின் மார்பை மெதுவாகத் தடவிக் கொடுத்தாள்.

பையன் கொஞ்சம் அழுகையை நிறுத்தினான். "பார்த்தீர்களா, ஹிருதயத்தில்தான் ஏதோ கோளாறு" என்று சொல்லி அந்த மாணவி சந்தோஷப் பட்டாள்.

திடீரென்று பையன் மறுபடியும் கத்த ஆரம்பித்து விட்டான், கையை மேலேயும் கீழேயும் ஆட்டிக் கொண்டு. கையில்தான் ஏதோ கோளாறு என்று கையைப் பரிசோதித்துப் பார்த்தார்கள். காலையும் பரிசோதித்தார்கள். அங்கு கூடியிருந்த அத்தனை மாணவ மாணவிகளும் ஆளுக்கு ஒரு வியாதியாகச் சொன்னார்களே தவிர, வியாதி இன்னதென்று கண்டு பிடிக்கவுமில்லை; பையன் அழுகையை நிறுத்தவுமில்லை.

கடைசியில், பையனையே விசாரிக்க ஆரம்பித்தார்கள். "உனக்கு உடம்பை என்ன செய்கிறது?" என்று பல தடவை கேட்ட பின், பையன் அழுது கொண்டே, "என்னுடைய பென்சில் அந்தப் பெட்டியின் இடுக்கில் விழுந்துவிட்டது!" என்றான்.

பலி



[லக்ஷ்மி கல்யாணசுந்தரம்]

அந்தி நேரம். ஆற்றக்கரை கண்ணுக் கெட்டியவரை ஒரே ரஸாயனக் கூடமாய்த் திகழ்கிறது. மேற்கு மலைத் தொடரின் பின் மறைந்து கொண்டிருக்கும் கதிரவன் இரசவாதம் செய்கிறான். வானளாவி நின்ற மருத மரங்களின் இலைகள் பொன்னிலைகளாய் மாறிவிட்டன. விசாலமான மணற் பரப்பு பொற் றகடென மின்னுகிறது. ஆற்றின் மத்தியில் 'யோகியர் உள்ளம்' போல் ஒடுங்கி ஓடிக்கொண்டிருந்த நீரோட்டம் உருகியோடும் பொன்னீர்போல் பிரகாசித்தது.

ஆற்றின் மேற்புறம் ஒரு மணல் மேடு. மருத மரமொன்றின் நிழல் வேகமாய் அவ்விடத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அங்கே பத்துப் பன்னிரண்டு சிறுவர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். அவர்கள் மத்தியில் ஒரு சிறு பையன். அவன் இடுப்பில் அழுக்குப் படிந்த கந்தை. கரிய நிறம். கழுத்தில் ஒற்றை உத்திராட்சம். எண்ணெய் என்பதைக் கனவிலுமறியாத அவன் தலைமயிர் சுருண்டு கற்றைக் கற்றையாய்க் காதுகளிலும் நெற்றியிலும் புரண்டு கொண்டிருக்கிறது. வயது பதினொன்று இருக்கும். மடியில் தகரப் போணி, மூங்கில் இகற்றால் ஆக்கப்பட்ட தம்பூரா. அவன் பாடிக்



கொண்டிருந்தான். அவனைச் சுற்றியிருந்த பிள்ளைகள் அவனுடைய பாட்டை வெகுவாய் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன் யார்? அவனுடைய பிறப்பு வளர்ப்பு என்ன? அவனுடைய தாய் தந்தையர் அச்சிறு வயதில் அவனைப் புறக்கணிப்பானேன்?—இவற்றைப் பற்றி யெல்லாம் கவலை கொண்டார் ஒருவருமில்லை. அவன் யாராயிருந்தால்தானென்ன? அவ்வூருக்கு

அவன் வந்த இரண்டு மாதத்திற்குள் வேண்டிய அளவுக்கு ஜனங்கள் அவனைப் பற்றித் தெரிந்து கொண்டனர். ரயில்வே ஸ்டேஷனிலும், பஸ் நிலையத்திலும், திருவிழாக் கூட்டங்களிலும், கடைத் தெருக்களிலும் ஜனக் கும்பலின் மத்தியிலிருந்து பாட்டுச் சத்தம் வந்து கொண்டிருந்தால், 'சிவாயம் பயல்'தான் பாடிக் கொண்டிருக்கிறான் என்று யாரும் சொல்லி விடுவார்கள்.

அலுப்புச் சலிப்பின்றி அவனைச் சுற்றியிருந்த சிறுவர்கள் கேட்கும் பாட்டுகளையெல்லாம் சிவாயம் பாடிக்கொண்டே வந்தான். அந்தி மயங்கி இருள் சூழ ஆரம்பித்தது.

"அடே சிவாயம்! இன்னும் ஒரே ஒரு பாட்டு! 'கண்டதுண்டோ கண்ணன் போல்' மட்டும் பாடிவிடு; போகலாம்!" என்று ஒரு சிறுவன் கேட்டுக் கொண்டான்.

பாட்டும் ஆரம்பமாயிற்று. ஆனால் யாரோ ஒருவர் அவனுடன் சேர்ந்து பாடுவதுபோல் தெரிந்தது. அவர்களுக்குப் பின்னால் ஒரு மனிதர் தன் காடு முரடான சாரீரத்தில், "கண்டதுண்டோ கண்ணன் போல்" என்று ஒத்துப் பாடிய வண்ணம், தள்ளாடித் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்தார். அவரைப் பார்த்ததுதான் தாமதம். சிவாயம் நீங்கலாக மற்றப் பிள்ளைகள் யாவரும் ஓட்டம் பிடித்தனர். அதோடு நிற்கவில்லை; அவர்கள் சற்றுத் தூரத்தில் போய் நின்று கைகொட்டி ஆர்ப்பரித்து, "ஏய், தண்ணி வண்டி!" என்று கத்தினார்கள்.

சிவாயத்துக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்துப் போய் அப்படியே எழுந்து நின்றான். ஊருக்குப் புதிதுதானே? வந்த மனிதரின் பிரபாவம் அவனுக்கு எப்படித் தெரியும்?

ஆனால் மற்ற சிறுவர்களுக்கோ அவரை ரொம்ப ரொம்ப நன்றாய்த் தெரியும். தாமோதரம் என்று அவருடைய தாய் தந்தையர் இட்ட பெயரைத் தூக்கியெறிந்து விட்டு, "தண்ணி வண்டி!" என்று அவருக்கு நாமகரணம் சூட்டியதே அவர்கள்தானே? 'குஷி' நேரங்களில் அவர் பாட்டுப் பாடும் பாடகராகவும், காட்டிய மாடும் நர்த்தகராகவும், தந்தி மரங்களுடன் முஷ்டி யுத்தம் பழகும் 'வஸ்தாத்' ஆகவும், ரோட்டில் போகும் மோட்டார்கள்—ஏன், ரயில் வண்டிகளைக் கூட எதிரில் சென்று நிறுத்த முயலும் பயில்வானாகவும், சமயங்களில் ரோடு போடும் உருளையாகவும் கூட எத்தனையோ விதமான அவதாரங்களெடுத்து, அவர் திருவிளையாடல் புரிந்திருக்கிறாரென்றால், ஊரிலுள்ள சிறுவர்கள் அவரை லேசில் மறந்து விடுவார்களா?

இத்தகைய பேர்வழியின் பக்கத்தில்தான் சிவாயம் நின்று கொண்டிருந்தான். வழக்கம் போல் அன்றும் அவர் 'வெள்ளைக் குதிரை'யின் மேல் ஆரோகணித்திருந்தார். அவர் சிவாயத்தின் முதுகில் பலமாய்த் தட்டிக் கொடுத்தார். அவனுடைய மெலிந்த தேகத்தில் அவர் தட்டிய தட்டு அதிக வலியை உண்டாக்கிய போதிலும், அவருடைய நல் எண்ணத்தை ஆமோதிக்கும் பாவனையாக அவன் பல்லை இளித்தான்.

"சபாஷ்! ஹஹ்ஹஹ்ஹா! தம்பி! நீ ரொம்...ப நல்...ல பையன்! உன் பாட்டு ரொம்ம்ம்...ப ஜோராயிருக்கு! ஹூம்...... ...உன் பேரென்ன, தம்பி!"

"சிவாயம், சாமி!"

தூரத்திலிருந்த மற்றச் சிறுவர்கள் கூச்சலிட்டனர்.

"ஏலே, சிவாயம்! ஓடி வந்திடு! 'தண்ணி வண்டி' உன்னைச் சட்டினியாக்கிடும்!—ஏய், தண்ணி வண்டி!!"

தாமோதரம் பிள்ளைக்குக் கோபம் வந்து விட்டது. அவர் அந்தச் சிறுவர்கள் மீது வசைமாரி பொழிந்துவிட்டு, "தம்பி, சிவாயம்! நீ பயப்படாதே! நான் யார் தெரியுமா? நான்தான்! — நான்தான் இந்த ஊர் பூரா



வுக்கும் ராஜா! நீ நம்முடைய சமஸ்தான வித்வானா யிருக்கிறாயா?" என்றார்.

"என்னா சொல்றீங்க, சாமி?"

"இதோ பாரு, ஜேபி நிறையக் காசு! நீ என் கூடவே வந்துடு; என் வீட்டிலேயே சாப்பிட்டுக்கிட்டு இருந்திடு! ... ஊம்?"

சிவாயத்துக்கு என்ன பதில் கூறுவதென்று தோன்றவில்லை. அவன் ஒருமுறை அவரை ஏறிட்டுப் பார்த்தான். கோவைக் கனிகளைத் தோற்கடிப்பவை போலிருந்த அவருடைய கண் விழிகளைக் காணவும் அவன் அங்கம் நடுங்கிற்று. தலையைக் கவிழ்ந்து கொண்டான். தாமோதரம் விடுவதாக இல்லை.

"என்ன தம்பி! 'சரி'ன்னு சொல்லு!"

"ஆகட்டும், சாமி!"

"அப்படிச் சொல்லு! ஊம் ... புறப்படு!" என்று தன் கைகளைச் சிவாயத்தின் தோளின்மீது போட்டுக் கொண்டு, தள்ளாடி நடந்து ஊருக்குள்ளே சென்றார் தாமோதரம்.

2

தாமோதரம் பிள்ளை தபால் இலாகாவில் குமாஸ்தாவாக இருந்தவர். உத்தியோகத்தின் நிமித்தம் பல இடங்களுக்கு மாற்றப்பட்டுக் கடைசியில் அவ்வூருக்கு வந்து சேர்ந்தவர். அதே ஊரில் சேர்ந்தாற்போல் நான்கு வருடங்கள் வேலை பார்த்த பிறகு, தேக நிலைமை காரணமாக அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் பந்துமித்திரர்களோ, மனைவி மக்களோ இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தால் உபகாரச் சம்பளம் பெற்ற பின்பும் அவர் ஏன் அந்த ஊரிலேயே இருந்து கொண்டிருக்கிறார்?

தாமோதரம் பிள்ளைக்கு எப்படியோ குடிப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. இக் கொடிய பழக்கத்துக்கு அவர் எப்படி அடிமையானார் என்று எல்லோரும் ஆச்சரியப் பட்டனர். அவர் போதையின்றி இருப்பதைப் பார்ப்பதே துர்லபம். ஆனாலும் அவர் பிறரிடம் மரியாதைக் குறைவாகவோ, நிதானம் தவறியோ இதுவரை நடந்து கொண்டது கிடையாது. எவ்வளவு குடிவெறியிலும், வீதியில் பெண்களைக் கண்டால் தலையைக் கவிழ்ந்து கொள்வார். நண்பர்களைக் கண்டால் நாணி ஒதுங்குவார். இவற்றையெல்லாம் பார்த்து ஜனங்களுக்கு அவர் பேரில் மிக்க அநுதாபம்.

இந்த நிலைமையில்தான் அவரிடம் சிவாயம் வந்து சேர்ந்தான்.

எங்கேயோ மலைப்புறங்களில் உற்பத்தியாகிப் பாறைகளிலும், பள்ளத் தாக்குகளிலுமாக வெவ்வேறு திசைகளில் அலைமோதித் திரிந்து, சம வெளிக்கு வந்ததும் ஒன்றையொன்று தேடி அலைந்ததைப்போல் சேர்ந்து கொள்ளும் இரண்டு கானாறுகள் போலிருந்தது இவ்விருவர் சேர்க்கையும். வயதிலோ, அந்தஸ்திலோ, வாழ்வுமுறையிலோ கிஞ்சித்தேனும் தொடர்பு, ஒப்புவமை இல்லாத இந்த இரண்டு ஜீவன்களும் திடீரென ஒரு குடும்பமாய் வாழ்க்கை நடத்துவதென்றால், அது முன் ஜன்மத்தில் 'விட்ட குறை'தானே?

இப்பொழுது சிவாயத்தின் பிச்சைக்கார வாழ்க்கை போய்விட்டது. அவனுடைய தகரத் தம்பூரா வேலையற்று ஒரு மூலையில் கிடந்தது. தாமோதரம் பிள்ளை அவனைத் தம்முடைய மகன் போலவே பாவித்து



வந்தார். அவனும் அவருக்குப் பணிவிடை செய்வதற்கென்றே தன் உடலையும் உயிரையும் அர்ப்பணித்து விட்டான்.

மாதா மாதம் தம்முடைய உபகாரச் சம்பளம் பூராவையும் சிவாயத்திடமே கொடுத்து விடுவார் தாமோதரம். அவன் பணத்தைப் பத்திரமாய் வைத்துக்கொண்டு தினசரி வீட்டுக்கு வேண்டியவரை செலவழித்துக் கொண்டு வருவான். அவருக்குக் குடிப்பதற்காகக் கொடுக்கும் பணத்தை அவன் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைப்பதற்கும் முயன்று வந்தான்.

ஒரு நாள், "சிவாயம், ஏதாவது பணமிருந்தால் கொடு!" என்றார் தாமோதரம்.

பணம் எதற்கு என்பது சிவாயத்துக்குத் தெரியும். ஆகவே, அவன் "என்னிடம் பணம் ஒன்றுமில்லையே!" என்றான்.

"என்னடா, இதற்குள் எல்லாம் தீர்ந்து விட்டதா?"

"இல்லை; கொஞ்சம் இருக்குங்க. அடுத்த 'பென்ஷன்' வரும் வரை அரிசிக்குத்தான் காணும்போலிருக்கு!"

"சரி; ஒரு ரூபாய் கொடு! அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்."

இன்று மட்டும் கொடுத்தால் நாளைக்கு மட்டும் சும்மா விருப்பாரா? சிவாயத்துக்கு ஒரு யோசனை தோன்றியது.

"ஒரு பத்து ரூபாய் நோட்டுத்தான் இருந்ததுங்க. இப்போதுதான் கடைக்குப் போயிருந்தேன். வேண்டிய சாமானை வாங்கிக் கொண்ட பிறகு செட்டியார், 'சில்லறை இல்லை' என்று சொன்னார். 'சரி, அப்புறம் வருகிறேன்' என்று வந்து விட்டேன்!" என்றான்.

எப்படியாவது கொஞ்சம் நேரத்தைக் கடத்தினால் மறந்து போய்விட மாட்டாரா என்று நினைத்தான் சிவாயம். அவன் எதிர் பார்த்தபடி தாமோதரமும் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை.

அதற்குள் அவருக்குச் சாதம் கொண்டு வந்து பரிமாறினான் சிவாயம். அப்போது தாமோதரம் அவன் மடியை உற்றுப் பார்த்துக் கொண்டே, "ஏண்டா, இன்னும் உனக்கு வேஷ்டி கட்டிக் கொள்ளத் தெரியவில்லையே! அதென்ன, பொட்டணம்? சரியாய்க் கட்டுடா!"

சிவாயத்துக்குச் 'சுருக்' கென்றது. அசட்டுச் சிரிப்புடன் அவன் அந்த இடத்தை விட்டு நகர ஆரம்பித்தான்.

"ஏலே, என்னடா! சொல்றேன், பேசாமல் நீ பாட்டுக்குப் போறயே! வேஷ்டியை அவிழ்த்துச் சரியாய்க் கட்டிக் கோடா!"

வேண்டா வெறுப்புடன் வேஷ்டியைச் சரியாய்க் கட்டப் போனான் சிவாயம். அப்போது ரூபாயும், சில்லறையுமாக அவன் மடியிலிருந்து பொல பொல வென்று உதிர்ந்தன. அவ்வளவுதான்; தன்னை ஏமாற்றி விட்டான் என்ற ஆத்திரத்துடன் "ஏண்டா, நாயே! பொய் வேறு சொல்கிறாயா? நீ என்னைத் தூக்கி நிறுத்துவதாக உன்னுடைய நினைப்போ? பிச்சைக்காரப் பயலே!" என்று சீறி எழுந்தார் தாமோதரம்.

அடுத்த கணம், 'பளீர், பளீ'ரென்று சிவாயத்தின் கன்னத்தில் நான்கு அறைகள் விழுந்தன. அதே கோபத்துடன் சாப்பிட்டதும் சாப்பிடாததுமாகத் தாமோதரம் பின்னை வெளியே போய்விட்டார்.





பயங்கர நாவலைப் படித்துப் பீதியடைந்தவர்

சிறிது நேரம் கழித்து அவர் உள்ளே வந்தபோது, சிவாயம் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அவன் கன்னம் வீங்கியிருந்தது. அதைப் பார்த்த தாமோதரத்தின் மனம் தாங்கவில்லை.

"சாப்பிட்டாயா?" என்று கேட்டார் அவனைப் பரிவுடன்.

"இல்லேங்க!" என்றான் சிவாயம்.

"ஏண்டா சாப்பிடவில்லே? ஊம்...... சாப்பிடு!"

"எனக்குப் பசிக்க வில்லேங்க!"

"இதோ பார், சிவாயம்! நான் கோபத்தில் உன்னை அடித்து விட்டேன். நீயும் பொய் சொல்லக் கூடாதல்லவா? ஆனாலும் நான் குடிக்கக் கூடாது என்பதற்காகத்தான் நீ அப்படிச் சொன்னாய் என்பதும் எனக்குத் தெரியும். அடுத்த மாதம் முதல் நான் குடிப்பதையே விட்டு விடுகிறேன். இப்பொழுது சரிதானா? போய்ச் சாப்பிடு, போ!"

அவருடைய வாக்குறுதி நீர் மேலெழுத்து என்பது சிவாயத்துக்குத் தெரியும். ஆனாலும், அவன் அவருடைய வார்த்தையைத் தட்டவில்லை; சாப்பிட்டான்.

3

ஐப்பசி மாதம் ஓர் இரவு.

பகல் முழுதும் இடைவிடாது மழை ஊற்றிக் கொண்டிருந்து விட்டு அப்பொழுது தான் நின்றது. ஊர் ஆரவாரம் அடங்கி விட்டது. தாமோதரம் பிள்ளை தம்முடைய வீட்டின் மேல் மாடியில் ஒரு கட்டிலில் நோயாய்ப் படுத்திருக்கிறார். சென்ற நாலைந்து நாட்களாய் அவருக்குக் கடுமையான ஜுரம். சிவாயம் கட்டிலின் பக்கத்தில் அவரைப் பார்த்த வண்ணம் விழித்திருந்தான். நாலைந்து நாட்களாய் அவனுக்கும் தூக்கம் என்பது கிடையாது. டாக்டர் தந்திருந்த மருந்தை வேளா வேளையில் அவரைச் சாப்பிடச் செய்வது, வற்புறுத்தியாவது கொஞ்சம் கஞ்சி, ஆரஞ்சுப் பழரசம் இவற்றை உண்ணச் செய்வது, அவருடைய படுக்கையை அடிக்கடி சரியாக விரித்துப் போடுவது போன்ற வேலைகள் அவனுக்குச் சரியாக இருந்தன.

இந்த நிலையில் அவனைச் சாராயம் வாங்கி வரும்படி தொந்தரவு செய்தார் தாமோதரம். டாக்டர், "அவருடைய இருதயம் இப்போது இருக்கும் நிலையில் சாராயம் சாப்பிட்டால் அதுவே அவருடைய கடைசி பாணமாயிருக்கும்!" என்று அவனிடம் சொல்லியிருந்தார். ஆகவே, அதற்காக அவர் பீடிகை போட ஆரம்பித்ததும், தந்திரமாய் எழுந்து வெளியே போய் மறுபடியும் அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான் சிவாயம். அப்போது அவர் சற்றுக் கண்ணயர்ந்திருந்தார். அவர் குறட்டை விடும் சத்தத்தைத் தவிர அறையில் வேறு சத்தம் ஒன்றுமில்லை. இந்த அமைதி சிவாயம் மனத்தில் பயத்தை உண்டாக்கியது.

அவன் மெதுவாய் எழுந்து தோட்டத்துப் பக்கமிருந்த சன்னலண்டை சென்றான். சத்தம் செய்யாமல் கதவைத் திறந்து வெளியே உற்று நோக்கினான். சில்லென்றிருந்த சன்னலின் கம்பிகள் அவன் கன்னத்தில் பட்டன. என்ன கோரமாயிருந்தது, அவைகளின் பரிசம்! ஏதோ அமானுஷ்யமான பேய்த்தன்மை பொருந்திய கரங்கள் தன்னுடைய கன்னங்களைத் தொடுவதுபோல் இருந்தது அவனுக்கு. அவன் தேகம் மயிர்க்கூச்செறிந்தது. கரிய மேகப் போர்வையால் நட்சத்திரங்கள் மூடுண்டு கிடந்தன. வானமும் பூமியும் தெரியாத ஒரு எல்லையற்ற இருட்கோளம் அவன் கண் முன் நின்றது.

பக்கத்தில் எங்கேயோ மொட்டை மாடியில் தூம்பு அடைபட்டுத் தேங்கி நின்ற மழைத் தண்ணீர் 'கட கட, கட் கட், கட கட' வென்று விழுந்துகொண்டிருந்தது. தோட்டக் காட்டில் எங்கோ ஒரு மழைத் தவளை 'ககக்...ககக்' என்று கூப்பிட்டது. கினைக்கு முன் பல தவளைகள் ஏகமாய்



போலீஸ் துணையுடன் நாவலைப் படிக்கிறார்!

இரைய ஆரம்பித்து விட்டன. பிலாக்கணம் வைத்தமாதிரி யிருந்தது அவைகளின் ஓலம்! இடையிடையே சொல்லி வைத்தாற்போல் இவ்விரைச்சல் நின்று மௌனம் நிலவும். இந்த நிச்சப்தம் அந்த இருளின் கோரத்தைப் பின்னும் அதிகப் படுத்தும்!

சிவாயத்தின் மனத்தில் ஏற்கெனவே அதிக பயம் குடிகொண்டிருந்தது. இவ்வந்தகாரத்தால் அவனது பீதி உச்ச நிலையை யடைந்தது. இவைகளெல்லாம் வரப்போகும் ஒரு அபாயத்தின் அறிகுறிகளோ? மயிரிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் தாமோதரத்தின் முடிவை இவை உணர்த்துகின்றனவோ?—இவ்விதம் எண்ணியபோது சிவாயத்தின் உடல் நடுங்கிற்று! தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது அவருடைய உயிரை மீட்க முடியுமானால்......?

“சிவாயம்! அடே சிவாயம்!”

தாமோதரம் விழித்துக் கொண்டார். சன்னலை மெதுவாக மூடிவிட்டுச் சிவாயம் அவர் பக்கத்தில் வந்தான்.

“என்ன வேணுங்க?”

“ரொம்பத் தாகமா யிருக்கு. நா வறளுகிறது. களைப்பாயு மிருக்கு......”

“கொஞ்சம் கஞ்சி சுட வைத்துக் கொண்டு வருகிறேன், குடிக்கிறீர்களா?”

“கஞ்சியாவது மண்ணாங்கட்டியாவது, உன் தலையிலே கொட்டிக்கோ!”

“டாக்டர்......”

“டாக்டர், டாக்டர்! அவனைக் கட்டிக் கொண்டு நீயே அழு. ரெண்டு பேருமாச் சேர்ந்து என்னைக் கொல்ல ஏற்பாடு பண்ணியிருக்கிறீர்களா, என்ன?”

சிவாயம் நடுங்கிவிட்டான். அவர் முகம் ஒளி யிழந்து சவக்களை தட்டியது. பேச்சுத் திக்குமுக்காடிற்று.

“சிவாயம், இப்போது நான் பிழைக்கணும்னு இரண்டே இரண்டு திரான் சாராயம் மட்டும் எனக்கு வாங்கி வந்து கொடுத்து விடு! அப்பத்தான் தெம்பா யிருக்கும்!”

சிவாயம் சிறிது நேரம் யோசித்தான். அன்று பூராவுமே அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. இப்பொழுது ஏதாவது சாப்பிட்டாக வேண்டும். அவர் போக்குப்படித்தான் விட்டுப் பார்க்கலாமே!

அவ்வளவுதான்; “இதோ வருகிறேன்!” என்று சொல்லிவிட்டு, ‘பாட்டில்’ ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு மழைத் தூற்றலில் ஓடினான் சிவாயம்.

4

மூன்று தினங்கள் கழிந்தன. தாமோதரம் பிள்ளை தம் வீட்டில் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் நீடித்த ஜுரத்தின் அயர்வு காணப்பட்டது. ‘இதோ வந்து விடுகிறேன்’ என்று போன சிவாயம் மூன்று தினங்களாகியும் வராமல் போனது அவருக்குப் பேராச்சரியமா யிருந்தது. அவனுக்கு என்ன நேர்ந்திருக்கக் கூடும்?

இவ்வாறு அவர் எண்ணிக் கொண்டிருக்கையில் ஒரு ஆசாமி உள்ளே வந்து, “ஐயா, நான் சர்க்கார் ஆஸ்பத்திரி சேவகன். நான்காம் நாள் இரவு ஒரு பையன் காரில் அடிபட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டான். இன்று காலை வரை பிரக்ஞை இல்லை; பேச்சுமில்லை. இப்பொழுதுதான் அவனுக்குப் பிரக்ஞை வந்தது. தங்கள் பெயரை இரண்டு முறை சொன்னான். அவனுடைய நிலைமை இன்னும் மோசமாய்த்தானிருக்கிறது. டாக்டர் தங்களுக்குத் தகவல் கொடுத்துப் பார்க்கச் சொன்னார்!” என்றான்.

தாமோதரம் பிள்ளை தன்னுடைய தேக நிலைமையைக் கூடக் கவனியாமல் உடனே ஆஸ்பத்திரிக்கு விரைந்து சென்றார். சிவாயம் ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தான். அளவற்ற ஆவலுடன் அவனை நெருங்கினார் தாமோதரம்.

"சிவாயம்! அப்பா, சிவாயம்!!"

சிவாயம் கண்களை மெதுவாகத் திறந்தான். அவன் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போல் வந்தது.

"நீங்களா!......"

தாமோதரம் பிள்ளையால் மேலே பேச முடியவில்லை. தொண்டையில் ஏதோ ஒன்று வந்து அடைத்தது. சிவாயத்தின் உதடுகள் மறுபடியும் அசைந்தன.

"பார்த்தீர்களா? நான் தங்களுக்காகச் சாராயம் வாங்கப் போனதற்காகத்தான் இந்தத் தண்டனை! கடவுள் கொடுத்த தண்டனை! நியாயமா, இல்லையா?"

தாமோதரம் பிள்ளையின் கண்கள் நீரை வடித்தன. "ஏன் அழுகிறீர்கள்? எனக்காகவா? நான் போய்விட்டால் பாவமில்லை; பிச்சைக்காரப் பயல்தானே?" என்று சிவாயம் தாமோதரத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, "போனது போகட்டும். இனிமேலாவது குடியை ஒழித்து விடுவீர்களா? 'ஒழித்து விடுவேன்' என்று எனக்குச் சத்தியம் செய்து கொடுங்கள், பார்க்கலாம்!" என்றான்.

தாமோதரம் பிள்ளை அதற்குச் சிறிதும் தயங்கவில்லை. உடனே விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே அவனுடைய கையைப் பிடித்து அழுத்தி, "சிவாயம், இதோ அப்படியே செய்து கொடுக்கிறேன். இனி நான் கனவிலும் குடியைப் பற்றி நினைப்பதே இல்லை!" என்றார்.

"இனிமேல் எனக்கு ஒரு கவலையும் இல்லை! ஆனால் என்னை மறந்து போக மாட்டீர்களே! இப்போது செய்த சத்தியம் எப்போதும் ஞாபகமிருக்குமல்லவா?"

அவ்வளவுதான்; சிவாயத்தின் கண்கள் மூடி விட்டன.

5

அன்று மாலை தாமோதரம் பிள்ளை தன்னுடைய வீட்டின் முன் அறையில் உலாவிக் கொண்டிருந்தார். அறை முழுவதும் வெறிச் சென்றிருந்தது. தட்டு முட்டுச் சாமான்களெல்லாம் சிவாயம் வைத்த இடத்திலேயே வைத்தபடி இருந்தன. அவனுடைய தகரப் போணித் தம்பூராக்கூட ஒரு மூலையில் கிடந்தது. சிவாயத்தை மட்டும்தான் காணோம்!

தம் வாழ்க்கையில் எதிர்பாராத விதமாய்க் குறுக்கிட்டுப் பிரிந்து சென்ற சிறுவனை எண்ணி யெண்ணி அவர் ஏங்கினார். உலகத்திலேயே தாம் வேறு நாதியற்றவராகி விட்டதுபோ லிருந்தது அவருக்கு. "போ போ!" என்று அவரை உலகமே உந்தித் தள்ளுவதுபோ லிருந்தது. ஆனால் எங்கே? அதுதான் தெரியவில்லை அவருக்கு!

மன அமைதியை இழந்துவிட்ட அவருக்கு, அப்போது கொஞ்சம் குடித்தே தீரவேண்டுமென்று தோன்றிற்று. இல்லாவிடில் தம் நெஞ்சத்தில் குமுறிக் கொந்தளித் தெழும் துக்கத்திலிருந்து தப்ப வழி கிடையாது என்றும் தோன்றிற்று!

வெளியே புறப்படுவதற்காக வாயில் பக்கம் திரும்பினார். அவருக்குப் பின்புறமாய் ஒரு குரல் எழுந்தது. என்ன! சிவாயம் குரல் போலல்லவா இருக்கிறது!

"இப்போது செய்த சத்தியம் எப்போதும் ஞாபகமிருக்குமல்லவா!"

திடுக்கிட்டுத் திரும்பினார் தாமோதரம்.

இறந்துபோன சிவாயமாவது, திரும்பி வந்து பேசுவதாவது! வெறும் மனப் பிரமை தான்! — திகில் நிரம்பிய மனத்துடன் அவர் சுற்று முற்றும் பார்த்தார். மேஜையின் பக்கம் அவர் பார்வை சென்றது. ஜன்னலின் வழியாக வந்த காற்றில் மேஜைமீது கிடந்த புத்தகங்கள் புரண்டு பக்கத்திலிருந்த தகரத் தம்பூராவின் கம்பிகளை மீட்டின.

"ட்ரும் ... ட்ரும் ... ட்ரும் ... ட்ரும்!"

அவ்வளவுதான்; தன்னை மறந்து மேஜையின் அருகில் சென்றார் தாமோதரம். தம்பூராவை எடுத்துக் கொண்டார். கண்ணீர் வடியப் பாடிக்கொண்டே கால்கள் போன வழி நடந்தார்.

* * *

பாபாசர் ஆலயத்தின் மணியோசை காற்றில் மிதந்து வருகிறது. கோவிலுக்கு அருகில் ஓர் ஆசிரமம். ஆசிரமத்தைச் சுற்றி நந்தவனம். சுமார் இருபது சிறுவர்கள் மலர்ந்த முகங்களுடன் செடிகளுக்கு நீர் வார்ப்பதும், மலர் கொய்வதுமாகச் சுறுசுறுப்புடன் இருக்கின்றனர். சிலர் ஏடுகள் வைத்துப் படித்துக் கொண்டிருக்கின்றனர். ஆம்; அது ஒரு குருகுலம். யாரோ ஒரு பரோபகாரி தம் வரும்படியைக் கொண்டு அக் குருகுலத்தைச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

அந்தப் பரோபகாரி யார்?

ஆம், அவர்தான் சிறுவன் சிவாயத்தினால் நன்னெறி யடைந்த தாமோதரம் பிள்ளை என்பதை யார்தான் இப்போது எளிதில் கண்டு கொள்ள முடியும்?



பொறாமை

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

பீஷ்மருக்காக ஜலக்கிரியை செய்து விட்டுத் துயரத்தில் மூழ்கிக் கிடந்த யுதிஷ்டிரனுக்கு வியாசர் ஒரு கதையைச் சொல்லுகிறார்.

எப்பேர்ப்பட்ட மனிதனையும் எவ்வளவு பெரிய அறிவாளியையும் பொறாமை என்பது கெடுத்துவிடும். பிரஹஸ்பதி தேவர்களுக்கே உபாத்தியாயர். சகல வேதங்களும் சாஸ்திரங்களும் படித்தவர். அவர் இந்தப் பொறாமையினால் ஒரு தடவை பிடிக்கப்பட்டு அவமானப் பட்டார்.

பிரஹஸ்பதிக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் பெயர் சம்வர்த்தர். அவரும் ரொம்பப் படித்தவர்; அதோடு மிகவும் நல்லவர். இதனால் அவர்மேல் பிரஹஸ்பதிக்குப் பொறாமை. அவரைப் பல விதத்தில் உபத்திரவம் செய்தார். தமயனாரின் தொந்தரவு மிதமிஞ்சிப் போனபடியால், அதனின்று தப்பிப் பிழைப்பதற்குச் சம்வர்த்தர் பைத்தியக்காரனைப் போல் நடித்து ஊர் ஊராகத் திரிந்து காலம் கழித்து வந்தார்.

நல்லவர்கள் பேரில் ஏன் இவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்றே உலகத்தில் பொறாமை ஏற்படுகிறது. இது விசித்திரமே ஆயினும், உண்மை!

இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்த மருத்தன் என்ற அரசன் கைலாசநாதரைக் குறித்துக் கடுந் தவம் செய்து இமய மலையில் ஓரிடத்தில் குவிந்து கிடந்த பொன் குவியலை வரமாகப் பெற்று, அதைக் கொண்டு ஒரு பெரிய யாகம் செய்ய ஆரம்பித்தான். அந்த யாகத்தை நடத்திக் கொடுக்கும்படி பிரஹஸ்பதியைக் கூப்பிட்டான். மருத்த ராஜா யாகத்தைச் செய்து அதிகப் பெருமை அடைந்து விடுவான் என்று தேவர்களின் சார்பாகப் பிரஹஸ்பதி பயப்பட்டு யாகத்தை நடத்திக் கொடுக்க வரமாட்டேன் என்று சொல்லி விட்டார். அதன்மேல் மருத்த ராஜா எப்படியோ விசாரித்துச் சம்வர்த்தரைக் கண்டு பிடித்து அவரை யாகம் நடத்தக் கேட்டுக் கொண்டான். அவர் முதலில் மறுதளித்துப் பிறகு ஒப்புக் கொண்டார். இதன்மேல் அவரிடம் பிரஹஸ்பதிக்குப் பொறாமை இன்னும் அதிகமாயிற்று.

"எனக்குப் பகைவனான இந்தச் சம்வர்த்தன் மருத்தனுடைய யாகத்தைச் செய்யப் போகிறான்" என்று பிரஹஸ்பதி எண்ணி எண்ணி அந்தப் பொறாமையினால் மிக இளைத்துப் போனார். நிறம் மாறி வெளுத்துப்போய்ப் பரிதாப நிலையடைந்தார்.

* * *

தேவர்களுக் கெல்லாம் ராஜாவான இந்திரன், தேவர்களின் புரோகிதரான பிரஹஸ்பதியிடம் வந்து "ஸ்வாமி, ஏன் இளைத்திருக்கிறீர்கள்? சுகமாகத் தூங்குகிறீர்களா? பணியாளர்கள் உங்களைச் சரியாக விசாரித்து வருகிறார்களா? ஏவப்படாமலே உங்களுக்கு வேண்டியதையெல்லாம் குறிப்பறிந்து செய்கிறார்களா? தேவர்கள் உங்களிடம் சரியாய் நடந்து வருகிறார்களா? அல்லது ஏதாவது குறை நேர்ந்ததா?" என்று இந்திரன் கவலைப் பட்டு விசாரித்தான்.

இதற்குப் பிரஹஸ்பதி, "தேவராஜனே! நல்ல படுக்கையில் சரியாகத்தான் படுக்கிறேன். பரிசாரகர்களும் அன்புடன் தான் விசாரிக்கிறார்கள். தேவர்கள் பரிபாலனையில் ஒரு குறைவும் இல்லை" என்று சொல்லிய பிறகு மேலே பேச்சுக் கிளம்பாமல் போயிற்று. துக்கம் பேச்சை அடக்கி விட்டது.

"ஏன் துக்கப்படுகிறீர்? ஏன் நிறம் வெளுத்து உடம்பு இளைத்திருக்கிறீர்?" என்று இந்திரன் அன்புடன் கேட்டான்.

பிரஹஸ்பதி விஷயத்தைச் சொன்னார். "சம்வர்த்தன் பெரிய யாகம் செய்யப் போகிறான். அதனால்தான் இப்படி இளைத்துப் போனேன்" என்றார்.



இந்திரன் ஆச்சரியப்பட்டான்.

"பிராமணரே! நீர் எல்லா இஷ்டங்களையும் அடைந்திருக்கிறீர். தேவர்களுக்கே புரோகிதராகவும் யோசனை சொல்லும் மகா புத்திமானாகவும் இருக்கிறீர். சம்வர்த்தரால் என்ன தீமை உண்டாகக் கூடும்? ஒன்றும் இல்லையே! ஏன் பொறாமைப்பட்டு வீணாகக் கஷ்டப்படுகிறீர்?" என்றான்.

இந்திரன் தன் யோக்யதையை மறந்து இவ்வாறு பிரஹஸ்பதிக்கு ஞானோபதேசம் செய்யப் போனான்! இந்திரனுடைய பழைய கதைகளையெல்லாம் பிரஹஸ்பதி எடுத்துக் காட்டி, "உன்னுடைய பகைவன் விருத்தி அடைகிறான் என்பதைக் கேட்டு நீ சும்மா இருப்பாயா? அப்படித்தானே நானும்? எவ்விதமாகவாவது இந்தச் சம்வர்த்தனை அடக்கி என்னை நீ காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

இந்திரன் அக்கினியைக் கூப்பிட்டு "நீ போய் அந்த மருத்தராஜாவின் யாகத்தை எப்படியாவது நிறுத்திவிட வேண்டும்" என்று சொல்லியனுப்பினான்.

அக்கினிதேவன் "சரி! செய்கிறேன்" என்று சொல்லிச் சென்றான். அக்கினியைப் பற்றிச் சொல்லவேண்டுமா? மரங்களையும் கொடிகளையும் எரித்து உலகம் நடுங்கப் பெரும் கர்ஜனை செய்து கொண்டு சென்றான். அரசனிடம் தேவசொரூபத்துடன் போய் நின்றான். அக்கினிதேவன் சுயசரீரத்துடன் தன்னிடம் வந்ததைக்கண்டு ராஜாவுக்குப் பரானந்தம் பொங்கிற்று. "கொண்டுவா ஆஸனம், அர்க்கியம் பாத்தியம், பசு!" என்று ஆட்களுக்கு உத்தரவிட்டான்.


அக்கினிதேவன் வந்த காரியத்தைத் தெரியப்படுத்தினான். "நீ இந்தச் சம்வர்த்தரை விட்டு விடு. உனக்குப் புரோகிதராக நான் பிரஹஸ்பதியையே கொண்டு வருகிறேன்" என்றான். கூட இருந்த சம்வர்த்தர் இதைக் கேட்டுக் கடுஞ்சினம் கொண்டார். அவர் சாஸ்திர நியமனப்படி பிரமசரியத்தை அனுசரித்து அபரிமித சக்தியை அடைந்திருந்தவர்.

"இந்தப் பேச்சை நிறுத்து! நான் கோபங்கொண்டு என்னுடைய கண்களினால் உன்னை எரித்து விடுவேன், ஜாக்கிரதை!" என்றார் சம்வர்த்தர்.

பிரமசரியம் அக்கினியையே எரிக்கும் தன்மையது!

சம்வர்த்தர் சொன்னதைக் கேட்டு, அக்கினி பகவான் பயத்தினால் அரசமரத்து இலையைப்போல் நடுங்கி இந்திர

சுதந்திரம்!



சுதந்திரக் கிளி (கூண்டுக் கிளியிடம்):—இந்தியா தேசத்துக்கே சுதந்திரம் கிடைக்கப் போகிறதாம்! நீ மட்டும் இன்னும் கூண்டுக்குள்ளே ஏன் உட்கார்ந்திருக்கிறாய்? இந்தா, இந்த அரத்தினால் அறுத்துக் கொண்டு வெளியே வந்து சேரு!

னிடம் திரும்பிப் போய் நடந்ததைச் சொன்னான்.

தேவராஜன், இந்தக் கதையை நம்ப வில்லை.

“அக்னியே! நீதான் மற்றவர்களை எரிக்கிறாய். உன்னை வேறொருவன் பஸ்மமாகச் செய்யவாவது? இது என்ன வேடிக்கை?” என்றான்.

“அப்படியில்லை தேவராஜனே! பிரம்ம பலமும் பிரம்மசரியத்தின் சக்தியும் உனக்குத் தெரியாதா?” என்று அக்னிதேவன் முன் காலத்தில் இந்திரனுக்குப் பிராம் மணர்களிடம் ஏற்பட்ட அவதிகளையெல்லாம் குத்திக் காட்டி ஞாபகப்படுத்தினான்.

பிறகு இந்திரன் அக்னியை விட்டு விட்டு, ஒரு கந்தர்வனைக் கூப்பிட்டு, “நீ மருத்தனிடம் என் தூதனாகப் போய்ச் சம்வர்த்தரை விட்டுவிடச் சொல்; இல்லாவிடில் என்னுடைய பகையைப் பெற்று அழிந்து போவான் என்று அந்த அரசனுக்குச் சொல்” என்றான்.

அப்படியே அந்தக் கந்தர்வ தூதனும் மருத்த ராஜனிடம் சென்று இந்திரன் சொன்னதைத் தெரியப்படுத்திப் பயமுறுத்தினான்.

இராஜா கேட்கவில்லை. “மித்திர துரோகம் மகா பாவம். நான் சம்வர்த்தரை விட்டுவிட முடியாது” என்றான்.

அதைக் கேட்ட கந்தர்வன், “அரசனே! இந்திரன் உன் மேல் வஜ்ராயுதத்தை வீசினால் நீ எவ்வாறு பிழைக்கப் போகிறாய்!” என்றான்.

இவ்வாறு சொல்லும்போதே ஆகாயத்தில் இந்திரனுடைய இடி முழக்கம் கேட்டது.

இந்திரன் யுத்தத்திற்கு வந்துவிட்டான் என்று அரசன் மிகவும் பயந்து சம்வர்த்தரிடம் சரண் புகுந்தான்.

சம்வர்த்தர் “பயப்படாதே!” என்று அரசனுக்கு அபய வார்த்தை சொல்லித் தம் தபோ பலத்தைப் பிரயோகித்தார். இந்திரன் அடங்கி ஒடுங்கிச் சாந்த வடிவமாக வந்து யாகத்திலும் கலந்து கொண்டான். அவியும் பெற்றுப் போனான். பிரஹஸ்பதியின் பொறாமைப் பிரயத்தனம் வீணாயிற்று. பிரமசரியம் வென்றது.

பொறாமை என்பது பொல்லாத பாவம். யாரையும் அது தீண்டும். சரஸ்வதியே தோல்வி யடையும் படிப்பைப் பெற்ற பிரஹஸ்பதியுங் கூடப் பொறாமைக்கு இரையானார். சாதாரண மனிதர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.



134. வில்லைக் கையில் வாங்கினான்!

சூர்ப்பனகைக்கு நேர்ந்த அவமானத்தைப் பார்த்ததும் கரனுக்கு அடங்காத கோபம் ஏற்பட்டு யுத்தத்துக்குப் புறப்பட்டான். பிறகு யோசனை செய்ததின் பேரில் பதினாலு படை வீரர்களை அனுப்பினால் போதும் என்று எண்ணி அவர்கள் யுத்தத்துக்குப் போக அனுமதி கொடுத்தான். அவர்களுக்கு ஒரே சந்தோஷம்.

என்ன லோடும்
  விரும்பி இறைஞ்சினார்;
சொன்ன நாணிலி
  அந்தகன் தூதென,
அன்னள் பிற்படர்
  வார்—ஆயினார்;
மன்னன் காதலர்
  வைகிடம் நண்ணினார்.

[என்ன லோடும்: கரன் அனுமதி கொடுக்கவும்; விரும்பி இறைஞ்சினார்: மிக்க மகிழ்ச்சியோடு கரனை வணங்கினார்கள்; சொன்ன நாணிலி அந்தகன் தூதென; வெட்கம் இல்லாது பொய் யெல்லாம் கட்டிச் சொன்ன சூர்ப்பனகையானவள் அவர்களுக்கு முன்னே எம தூதன் போல நடந்து போனாள்; அன்னள் பின் படர்வார் என ஆயினார்; அவள் நடக்கத் தாங்கள் பின்னால் போனார்கள்; மன்னன் காதலர் வைகிடம் நண்ணினார்; சக்கரவர்த்தித் திருக்குமாரர்களான ராம லக்ஷ்மணர் தங்கிய இடத்தை நெருங்கினார்கள்.]

இடத்தை நெருங்கினதும் இதுதான் ராம லக்ஷ்மணர் தங்கும் இடம் என்று குறிப்பிட்டாள் அரக்கி.

அந்தச் சமயத்தில் விஷ்ணு மூர்த்தியைத் தியானித்த வண்ணமாய் இருந்தான் ராமன்.

துமிலப் போர்வல்
  அரக்கர்க்குச் சுட்டினான்;
அமலத் தொல்பெயர்
  ஆயிரத்(து) ஆரியான்
நிமலப் பாத
  நினைவின் இருந்தஅக்
கமலக் கண்ணனைக்
  கையினில் காட்டினாள்.

[துமிலப் போர் வல் அரசர்களுக்கு: பேர் ஆரவாரத்தோடு போர் செய்யும் அரக்கருக்கு; துமிலம்: பேர் ஆரவாரம்; அமலத் தொல் பெயர் ஆயிரத்து ஆரியான்: மெய்யான லக்ஷணங்களைக் கூறும் ஆயிரக் கணக்கான பெயர்களையுடைய விஷ்ணு மூர்த்தியின்; நிமலப் பாத நினைவின் இருந்த: பழுதில்லாத பொருளில் மனசைச் செலுத்தியவனாக இருந்த; கமலக் கண்ணனை: தாமரைக் கண்ணனான ராமனை.]

தியானத்திலிருந்த ராமனைப் பார்த்துக் கொண்டார்கள் அரக்கர்கள். பார்த்ததும் "அவனைப் பிடித்து ஆகாயத்தில் வீசுவோம்; விழும்போது ஏந்தி மறுபடியும் ஆகாயத்தில் வீசி அம்மானை ஆடுவோம்" என்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் "கயிற்றினால் கட்டி விடுவோம்" என்கிறார்கள். கடைசியாகக் கரன் சொன்னபடி செய்வோம் என்று ராமனைச் சூழ்ந்து வந்து நின்றார்கள்.

'எற்று வாம்பிடித்(து)
  ஏந்துதும்' என்குனர்;
'பற்று வாம்நெடும்
  பாசத்தின்' என்குனர்,
'முற்று வாம்இறை
  சொல்முறை யால்' எனாச்
சுற்றி னார்,வரை
  சூழ்ந்தன்ன தோற்றத்தார்.

[எற்றுவாம் பிடித்து: பிடித்து ஆகாயத்தில் வீசுவோம்; ஏந்துதும் என்குனர்: கீழே விழும்போது கையினால் ஏந்திக் கொள்ளுவோம் என்கிறார்கள் சிலர்; முற்றுவாம் இறை சொல் முறையால் எனா: சூழ்ந்து கொள்ளுவோம் அரசன் கட்டளை யிட்டபடி என்று சொல்லிக் கொண்டு; சுற்றினார் வரை சூழ்ந்



சென்ற பத்தாந் தேதி ஞாயிற்றுக்கிழமை யன்று திருக்குறள் விழாவை முன்விட்டுப் பேரம்பூர் தமிழர் மன்றத்தார் நடத்திய ஊர்வலக் காட்சி.

தன்ன தோற்றத்தார்: இராமனைச் சூழ்ந்து கொண்டார்கள், கருமலைகள் சூழ்ந்தது போலத் தோற்றம் உடைய அரக்க வீரர்கள்.

குறிப்பு: ராமன் தியானத்தில் இருந்ததால் அரக்கரது வேடிக்கைகளை ராமன் பார்க்கவில்லை: ஆனால் நாம் அநுபவிக்கிறோம். கருமலைகள் சூழ்ந்து முற்றுகை போடும் செயல் விசித்திரம் அல்லவா!]

அரக்கர்கள் மெல்ல மெல்லச் சூழ்ந்து வந்தார்கள். தியானத்திலிருந்து ராமனும் விழித்தான். அரக்கர்களைப் பார்த்துக் கொண்டான். விஷயம் தெரிந்து விட்டது.

ஏத்து வாய்மை
இராமன் இளவலைக்,
'காத்தி தையலை'
என்று, தன் கற்பகம்
பூத்த(து) அன்ன
பொருவில் தடக்கையால்,
ஆத்த நாணின்
அருவரை வாங்கினன்.

[ஏத்து வாய்மை இராமன்: யாருமே உணர்ந்து புகழ்தற்குரிய சத்தியவானான ராமன்; சத்தியமானது வீரம் முதலிய சக்திகளைக் கொடுக்கும் என்பது இங்கே குறிக்கப் படுகிறது: இளவலைக் காத்தி தையலை என்று: தம்பி லக்ஷ்மணனைப் பார்த்து, சீதையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் என்று சொல்லி விட்டு; கற்பகம் பூத்தது அன்ன: கற்பகத் தருவில் செந்தாமரை மலர் பூத்தாலப் போன்ற; பொருவில் தடக்கையால்: ஒப்பில்லாத பருத்த கையினால்; ஆத்த நாணின் அருவரை வாங்கினன்: நாண் பூட்டிய மலை போன்ற வில்லைக் கையில் வாங்கிக் கொண்டான்.]

சிறிதும் எதிர்பாராத நிலையில் திடீ ரென்று கண் முன் தோன்றுகிறார்கள் அரக்கர்கள். சீதையைப் பார்த்துக் கொள்ள வேண்டும்; அதற்குத் தம்பி இருக்கிறான்.

மற்றப்படி லக்ஷ்மணன் செய்ய வேண்டியதென்ன! வில்லை நாணேற்றி அண்ணன் கையில் கொடுத்துவிட வேண்டியது தான். அதையும் செய்துவிட்டான் அவன்.

தெய்வமா, மனிதனா?



[ரா. வீழிநாதன்]

கோபால சர்மா மிகவும் கவலையில் ஆழ்ந்தார். அறுபது ரூபாய் சம்பளத்தில் நான்கு ஜீவன்களை ரக்ஷிக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பெண்ணின் கல்யாணத்திற்காகப் பணம் சேகரித்து வைப்பது என்றால் இலேசுப்பட்ட காரியமா?

பெண்ணிற்கு நல்ல வரனாகக் கிடைத்துக் கொண்டிருந்தது. பையன் கொஞ்சம் படித்திருந்தான். நாளைக்கே எங்கேயாவது வேலையும் கிடைத்துவிடக் கூடும்.

இவ்வளவு நல்ல வரன் கையை விட்டுப் போய்விடும் போலிருக்கிறதே என்று சர்மா கவலையுற்றார். பையனின் தந்தை மிகவும் பிடிவாதம் பிடித்தார். குறைந்தது ஐந்நூறு ரூபாய் வரதட்சணை ரொக்கமாகக் கையில் கொடுத்துவிட வேண்டுமென்று! இதைத் தவிர, கல்யாணச் செலவு வேறு செய்தாக வேண்டும்!

தபால் இலாகாவில் சர்மா பதின்மூன்று வருஷ காலம் வேலை பார்த்திருக்கிறார். அவரது தந்தை ஜீவியவந்தராயிருந்த காலத்தில் இவருக்கு இருபத்து ஐந்து ரூபாய்தான் சம்பளம் கிடைத்து வந்தது. அதிலேயே இவர் இரண்டு மூன்று ரூபாய் கூட மிச்சப் படுத்தி வந்தார். ஆபத்துக் காலத்தில் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடனேயே, அவர் 'ஸேவிங்ஸ் பாங்கி'யில் நானூறு ரூபாய் போட்டு வைத்திருந்தார்.

இருநூறு, இருநூற்று ஐம்பது ரூபாய் தனது தந்தையைக் கேட்டு வாங்கித் தந்து விடுவதாக அவரது மனைவி சொல்லி வந்தாள். கல்யாணத்திற்குக் குறைந்தது இன்னும் இருநூறு மூந்நூறு ரூபாயாவது வேண்டும்.

கடைசியில், சர்மா நினைத்த வரனையே முடித்து விடுவதாகச் சங்கல்பம் செய்து கொண்டார். வரதட்சணை ஐந்நூறு ரூபாய் கொடுத்து விட்டார். அவரது மனைவியும் சொன்னபடி 250 ரூபாய் தனது பிறந்தகத்திலிருந்து வாங்கி வந்து விட்டாள்.

கல்யாணம் கூடிய வரையில் சிறப்பாகவே நடைபெற்றது.

கல்யாணத்திற்குப் பிறகு சர்மா மிகவும் கவலையுற்றார். வாங்கிய கடனைத் தீர்ப்பது எப்படி என்றுதான்! கவலை நீங்கிய ரங்கம்மாள், சர்மாவின் கவலையை உணர்ந்தாளில்லை. கல்யாணத்தில் செலவழிந்த அளவு சர்மாவிடத்தில் பணம் இல்லை என்பதை மட்டும் அவள் அறிந்

இருந்தான். ஆனால், அவர் பணத்திற்கு என்ன ஏற்பாடு செய்திருந்தார் என்பதைக் கேட்க வேண்டும் என்ற எண்ணமே அவனுக்கு உதிக்கவில்லை. 'கிராமத்தில் அவருக்கு எல்லோரையும்தான் தெரியுமே, யாரிடமாவது வாங்கியிருப்பார்' என்பது அவனது நினைப்பு.

★

சர்மா இருந்த போஸ்டாபீஸ் ஒரு குக்கிராமத்தில் இருந்தது. அங்கு அவர்தான் போஸ்ட் மாஸ்டர், ரிஜிஸ்தர் கிளார்க்கு, மணியார்டர் கிளார்க்கு, ஸேவிங்ஸ் பாங்க் கிளார்க்கு எல்லாம். இந்தமாதிரி இருந்ததனால்தான், அவர் போஸ்டாபீஸ் பணத்தைக் கடனாகக் கையாள முடிந்தது. ஆம்! அரசாங்கப் பணத்திலிருந்து அவர் இருநூற்று ஐம்பது ரூபாய் தமது பெண்ணின் கல்யாணத்திற்கென எடுத்துச் செலவழித்து விட்டார்.

இது அவரைத் தவிர வேறு ஒரே ஒருவருக்கு மட்டுந்தான் தெரியும். அவன்தான் ரன்னர் பிச்சை.

ஆறு மாதத்திற்கொரு தடவை தபாலாபீஸைப் பார்வையிடப் போஸ்டல் இன்ஸ்பெக்டர் வருவார். அந்தச் சமயங்களிலெல்லாம் ஒரு வியாபாரியிடம் சென்று ஏதாவது காரணம் கூறி இரண்டொரு நாளைக்குக் கைமாற்றாக அத்தொகையைப் பெற்றுக் காரியத்தை நிர்வகித்து வந்தார் சர்மா.

ஆனால், 'திருட்டு வெளிப்பட்டு விட்டால் கை விலங்கு கால் விலங்கு அணிந்து 'சந்தி' சிரிக்கவேண்டி வருமே' என்ற திகில் மட்டும் அவர் மனத்தை விட்டகன்ற பாடில்லை.

அந்த இருநூற்று ஐம்பது ரூபாய்க்காக அவர் எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்தார். ஆனால் ஒன்றும் நடைபெற வில்லை. மனைவியின் நகைகளை விற்று விடலாம் என்றாலோ, அதன் மூலம் இருநூற்று ஐம்பது ரூபாய் தேறாது. நோட்டு எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கலாம் என்றாலோ, கொடுப்பவன் கிடைக்கக் காணோம்!

கவலையினால் சர்மாவின் உடல் பலஹீன முற்று விட்டது. இருந்தாலும் 'சார்ஜ்' கொடுக்கவேண்டி வருமே என்ற பயத்தில் அவர் நடமாடிக் கொண்டுதா னிருந்தார். ரங்கம்மாள் டாக்டரிடம் காட்டும்படி அடிக்கடி கூறுவாள். ஆனால் அவர் சிரித்துக்கொண்டே, "எனக்கென்ன, உடம்பிற்கு? வீண் கவலை ஏன் படுகிறாய்? நான் திடமாகத்தானே இருக்கிறேன்? இல்லாவிட்டால் இப்படி நடமாடுவேனா? பதினைந்து மணி நேரம் ஆபீஸிலே வேலை பார்க்கிறேன், என் உடம்பு சரியாயில்லை என்று நீ சொல்கிறாய்! நான் என்னத்தைச் சொல்ல? என் உடம்பு எனக்குத் தெரியாதா? உன் கண்களைத்தான் டாக்டரிடம் காட்ட வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது!" என்று கூறி மழுப்பி விடுவார்.

மனோவலி என்பது அலாதி சக்தி வாய்ந்தது. களைப்புற்ற அவயவங்கள்கூட மனோவலியின் காரணமாகப் பலம் பெற்று விடுகின்றன. கருமி ஒருவன் சாகுந்தறுவாயில் இருந்தானாம். தனக்குப் பின்னால் தான் சேர்த்து வைத்துள்ள சொத்தைத் தனது பிள்ளை அழித்து விடுவானே என்ற கவலை அவனுக்கு ஏற்பட்டு விட்டது. உடனே, 'நான் சாகவாவது! அதெல்லாம் முடியவே முடியாது!' என்று திடசங்கல்பம் செய்துகொண்டு விட்டான். அதற்குப் பின்னர், மரணம்கூட அவனை யணுகப் பயப்பட்டது என்று சொல்கிறார்களே, அந்தக் கதை சர்மாவுக்கு நினைவு வந்தது. இதேமாதிரி இன்னும் அநேக கதைகள் அவர் கேள்விப்பட்டிருக்கிறார். ஆனால், முன்பெல்லாம் அதில் அவருக்கு நம்பிக்கை உதிக்கவில்லை. இப்பொழுது, மனோவலியின் மூலம் எக்காரியத்தையும் சாதித்துவிட முடியும், மரணத்தையே விரட்டி யடித்துவிட முடியும் என்பதை அவர் கண்கூடாகக் கண்டார்.

ஆனால், "இந்த மனோவலியின் மூலம் பணத்தை மட்டும் சம்பாதிக்க முடியவில்லையே!" என்று அவர் வருந்தினார்.

இந்த நிலையில் இரண்டு வருஷ வாழ்க்கை ஓடிவிட்டது. நான்கு 'இன்ஸ்பெக்ஷன்'களை மெதுவாகச் சமாளித்து விட்டார். அதனால் அவருக்குத் தன்னம்பிக்கைகூடப் பிறந்து விட்டது. முன்



னிருந்த கவலை சிறிது சிறிதாகக் குறையக் கூட ஆரம்பித்தது. இன்ஸ்பெக்ஷனுக்கு வரும் ஆபீஸர்கள் முன் அறிவிப்புடன் வந்து கொண்டிருந்ததனால், அவர் கவலையற்றுக் காரியத்தைச் சமாளித்து வந்தார்!

★

ஒரு நாள் காலை, தபால்களை அனுப்பி விட்டு வேலையை முடித்துக் கொண்டு, நாலைந்து நண்பர்களுடன் வம்பு அடித்த வண்ணம் உட்கார்ந்திருந்தார் சர்மா. அச்சமயம் திடீரென ஆபீஸின் விலேஜ் சேவகன் உள்ளே நுழைந்து, "எசமான் வராங்க!" என்றான்.

லீவில் சென்றிருந்த ஆபீஸர், திரும்பும் பொழுது வேறெந்தத் தபாலாபீஸையும் பார்வையிடாமல், திடீரென இந்த ஆபீஸுக்கு 'இன்ஸ்பெக்ஷ'னுக்காக வந்து விட்டார்.

சர்மாவுக்கு எவ்வித யோசனையும் ஓடவில்லை. ஆபீஸர் உள்ளே நுழைவதற்குள், நண்பர்கள் அனைவரையும் பின் கட்டு வழியாக வெளியே அனுப்பி விட்டுத் தம் அலுவல்களைக் கவனிக்கலானார்.

இன்ஸ்பெக்ஷனுக்கு வரும் ஆபீஸரெல்லாம் வந்ததும் பணத்தை எண்ணிக் கணக்கைச் சரி பார்த்துக்கொண்ட பிறகு தான் தங்குமிடத்திற்குப் போகவேண்டுமென்பது தபால் இலாகாவின் சட்டம். அந்தச் சட்டப்படியே ஆபீஸர் காரியங்களைக் கவனிக்கலானார்.

சர்மா ஸ்தம்பித்து விட்டார். வருங்கால சித்திரம் அவரது மனக்கண்முன் தெளிவாக விழுந்தது. பணம் குறைந்திருப்பதைக் கண்ட ஆபீஸர் அவரைப் போலீஸார் கையில் ஒப்படைப்பது போலவும், போலீஸார் கையில் 'காப்பு'ப் போடுவது போலவும் கைது செய்து அவரைச் சிறைக்கு இழுத்துச் செல்வது போலவும், இதைக் கண்ட ரங்கம்மாள் வீறிட்டுக் கூச்சலிட்டு மூர்ச்சித்து விடுவது போலவும் அவரது அகக் கண்களின் முன்னிலையில் பயங்கரக் காட்சிகள் தாண்டவமாடின. அவரது நா வறண்டு விட்டது. ரத்தம் தோய்ந்து விட்டது.

ரன்னர் பிச்சை அடிக்கடி அவரை யணுகிச் சமிக்ஞை செய்யலானான். இதனால் அவரது உள்ளம் இன்னும் அதிகமாகப் பதற்றமுற்றது. கணக்குப் பூர்த்தியானதும், ஆபீஸர் இரும்புப் பெட்டியின் அருகில் சென்றார்.

"விஷயத்தை ஆதியோடந்தமாகக் கூறி, தான் 250 ரூபாய் கையாண்டுவிட்ட பிழையை ஸ்பஷ்டமாக ஒத்துக் கொண்டு விட்டால் என்ன!" என்று கூட சர்மாவுக்கு எண்ணம் உதித்தது. ஆனால் உள்ளமும் உடலும் அதற்கு ஒன்று சேர மறுதளித்து விட்டன. மனம் தட்டுத்தடுமாறிக் கொண்டிருந்தது. கை ஒரு மெஷினைப் போல, எவ்விதப் பிழையுமின்றி பணத்தை எடுத்து எண்ணி வைத்துக் கொண்டேபோயிற்று.

இன்ஸ்பெக்ஷன் நேரங்களைத் தவிர, அவர் பணத்தைத் தம் கையால் தொட்டறியார். பெட்டியில் எத்தனை ரூபாய்கள் இருக்கின்றன என்றுகூட அவருக்குத் தெரியாது.

அவர் நோட்டுக் கட்டுக்களை எடுத்து வைத்துக் கொண்டே போனார். ஆனால் எவ்வளவு வைத்திருக்கிறோம் என்று அவருக்கே தெரியாது. எண்ணிக்கை அடுத்த நிமிஷம் மறந்து விடும். இருந்தாலும்,



"ஏன் ஸார்! A யும் B யும் எல்லாத் தொழிலும் செய்வாளோ?"

ரூபாய்கள், அரை ரூபாய்கள், கால் ரூபாய்கள், அணாக்கள், காலணாக்கள், தம்பிடிகள் என்று பிரித்து எல்லாவற்றையும் ஆபீஸருக்கு முன் எண்ணி வைத்தார்.

"இரும்புப் பெட்டியில் பணம் தீர்ந்து விட்டது; கையில் விலங்கு மாட்ட வேண்டியதுதான் பாக்கி!" என்றது அவரது மனம்.

'ஆல் ரைட்' என்று கூறி ஆபீஸர் எழுந்ததும் அவருக்குச் சுய அறிவு வந்தது. பணத்தைப் பற்றிய கவலையையே மறந்து, ஆபீஸரை வழியனுப்ப வாசல் வரைக்கும் வந்து விட்டார்.

வழி யனுப்பி விட்டுத் திரும்பிய அவரிடம், "ரொம்ப பயந்து போயிட்டீங்களே, எசமான்!" என்றான் பிச்சை.

"ஏன் பிச்சை! கணக்கு எப்படிச் சரியா யிருந்தது?" என்று கேட்டார் சர்மா.

பிச்சை ஒரு குறுநகை மட்டும் செய்தானே தவிர, பதிலளிக்கவில்லை. இரும்புப் பெட்டியினருகில் சென்று மறுபடியும் பணத்தை எண்ணினார் சர்மா.

கணக்கு சரியாகவே இருந்தது. அவருக்கேற்பட்ட வியப்பிற்கு அளவில்லை. பிச்சையை மறுபடியும் நோக்கினார்.

அவருக்குப் பக்தர்களின் ஞாபகம் வந்தது. பக்த ராமதாஸர் என்ன! மாணிக்க வாசகர் என்ன! தெய்வம் அவர்களை ஆபத்துக் காலத்தில் ரட்சிக்கவில்லையா?— அப்படியேதான் என் விஷயத்திலும் நடந்திருக்குமா? நான் அப்படிப்பட்ட புண்ணியசாலியா?

யோசனை மிகுதியினால் சர்மாவின் கோணிப்போன முகத்தைக் கண்ட பிச்சையால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

"ஏன் பிச்சை! சிரிக்கிறாயே? பணம் எங்கிருந்து கிடைத்தது? சொல்!" என்றார் சர்மா.

"நான்தான் சாடை காட்டினேனுங்களே, பணம் சரியா யிருக்குதுன்னு!" என்றான் பிச்சை.

"அதான் கேக்கிறேன், பணம் எப்படிச் சரியா யிருந்ததுன்னு?" என்று ஆவலுடன் வினவினார் சர்மா.

"காலையிலே நீங்க வெளியே போயிருந்திங்கல்லே, அப்போ ஷோக் சுந்தரமய்யரு பம்பாய்க்கு இன்ஷ்யூர் செய்யணும்னு 250 ரூபாய் சில்லறையாக் கொண்டாந்து நோட்டுக் கேட்டாருங்க. 'பணத்தை வச்சிட்டுப் போங்க, ஐயா வந்ததும் நோட்டு வாங்கி வச்சுடறேன்'னு அவர் கிட்டே சொன்னேன். அவரும் 'சரி'ன்னு வச்சிட்டுப் போயிட்டாருங்க! அவரு பணந்தான் கணக்கையும் சரிக்கட்டி வைத்து, உங்க மானத்தையும் காப்பாத்தி வைச்சதுங்க!" என்று பிச்சை விவரத்தைக் கூறினான்.

இருநூற்றைம்பது ரூபாயா? ஏன், அந்தச் சுந்தரமய்யர் இருநூறு கொடுத்திருக்கக் கூடாதா? இல்லை, முந்நூறு தான் கொடுத்திருக்கக் கூடாதா? கணக்காக இருநூற்றைம்பது ரூபாய் கொடுப்பானேன்?

இந்தப் பிரச்னைக்குப் பதில் சர்மாவின் மூளைக்கு எட்டவே இல்லை.

எப்படியோ சங்கடம் தீர்ந்துவிட்டது. ஆனால், அவரது உள்ளம் மட்டும் சாந்தி அடையவில்லை.

ஆம், இந்தச் சங்கடமான சமயத்தில் வந்து சர்மாவுக்கு உதவியது யார்? தெய்வமா, மனிதனா?

படித்துப் பார்!

ஒளி உதயம்

[கு. ப. சேது அம்மாள்; புதுமலர் நிலையம்; விற்பனை: காசிநாத் அண்டு கோ., பெரிய கடை வீதி, கோயமுத்தூர்; விலை: ரூ. 2.]

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்லுவார்கள். அது எவ்வளவு உண்மை என்பது காலஞ்சென்ற மறுமலர்ச்சி எழுத்தாளர் கு. ப. ரா. வின் சகோதரி கு. ப. சேது அம்மாளின் 'ஒளி உதயம்' என்ற கதைத் தொகுதியில் வந்துள்ள 'ஒரு சோறு' என்ற கதையைப் படிக்கும்போது வெட்ட வெளிச்சம் போல் தெரிகிறது. பாஞ்சாலியின் உள்ளத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். ஒவ்வொரு கதையும் தனித் தனி அம்சங்களில் சிறந்து விளங்குகின்றன. மொத்தத்தில் ஆசிரியை சொல்லுவது: "என் கண்களால் கண்டதைக் கதையாக எழுதியிருக்கிறேன். உபயோகப் படுகிறவர்களுக்கு உபயோகப் படட்டுமே என்று."

படித்துப் பார்த்து, உங்களுக்கு உபயோகப் படுமா என்று தெரிந்து கொள்ளுங்கள்.

புயல்

[ரகுநாதன்; ஸ்டார் பிரசுரம், திருச்சி; விலை: ரூ. 2-8.]

ராஞ்சி என்ற பெண் ஒருவனைக் காதலிக்கிறாள்; வேறொருவனை மணக்கிறாள். அவள் உள்ளத்தில் வித விதமான உணர்ச்சிகள் எழுந்து அலை மோதுகின்றன; கொந்தளிக்கின்றன. முடிவில் ராஞ்சியின் பெண்மை வெற்றி பெறுகிறது. தான் மணந்த மணவாளனுடன் வாழ முடிவு செய்கிறாள்.

இது ஆசிரியரின் 'கன்னி முயற்சி' என்று அறிவிக்கப் படுகிறது. ஆனால் புஸ்தகத்தைப் படிக்கும்போது 'மடந்தை'க் குரிய வெற்றியே பெற்று விட்டார் என்று எண்ணத் தோன்றுகிறது.



நீலமும்... ...மணியும்

ராஜி

நீலமும் மணியும் சகோதர முயல்கள். இந்த இரண்டு முயல்களும் ஒருநாள் கடை வீதியில் விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது ஒரு கடையில் நிறைய முள்ளங்கிக் கிழங்குகள் பச்சைப் பசேல் என்ற கீரையுடன் விற்பனைக்காக வைத்திருந்தன. முள்ளங்கி என்றால் முயல்களுக்கு மிகவும் பிடிக்கும் அல்லவா? நீலத்திற்கும் மணிக்கும் எப்படியாவது கடைக்காரனிடமிருந்து ஒரு முள்ளங்கிக் கிழங்கையாவது வாங்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி விட்டது. ஆனால், கடைக்கார நரியோ மிகவும் பொல்லாத நரி.

"நரியாரே, எங்களுக்கு ஒரு முள்ளங்கிக் கிழங்கு கொடுங்கள்" என்று நீலமும் மணியும் கேட்டன.

"காசு இல்லாமல் கொடுக்க முடியாது!" என்று கண்டிப்பாய்ப் பதிலுரைத்தது நரி.

"எங்களிடம் காசு இல்லை; இனாமாகக் கொடுங்கள்!" என்று நீலமும் மணியும் கேட்டன.

நரிக்குக் கோபம் வந்தது. அது நீலத்தையும் மணியையும் விறைத்துப் பார்த்துக் கொண்டே, "ஐந்து நிமிஷம் கழித்து வாருங்கள்!" என்று சொல்லி விட்டுக் கடைக்குள் சென்றது.

ஐந்து நிமிஷம் ஆனதுதான் தாமதம். நீலமும் மணியும் நரியின் கடைக்குச் சென்று முள்ளங்கியைக் கேட்டன. நரியும் ஒரு முள்ளங்கியைக் கொடுத்து அனுப்பிற்று. சந்தோஷமடைந்த நீலமும் மணியும் முள்ளங்கியைக் கையில் எடுத்துக் கொண்டு குதித்துக் கொண்டே ஒரு மரத்தடிக்குச் சென்றன. நீலத்திற்குத் தன் தம்பி மணிக்குக் கொடுக்காமல் முழு முள்ளங்கியையும் தானே தின்ன வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. ஆகவே, அது முள்ளங்கியின் மீதுள்ள கீரையை மாத்திரம் பிய்த்து மணியின் கையில் கொடுத்து விட்டு ஒரே ஓட்டமாக ஓடி விட்டது.


பாவம்! ஏமாந்த மணிக்கு அழுகை அழுகையாக வந்தது. அது முள்ளங்கிக் கீரையைக் கையில் எடுத்துக் கொண்டு கடைத் தெருவுக்குச் சென்று, தன்னை ஏமாற்றிய நீலத்தைப் பற்றி நரியாரிடம் புகார் சொல்ல வேண்டும் என்று எண்ணிற்று. ஆனால், இரவு அதிக நேரம் ஆகிவிட்ட படியால் கடைத் தெருவில் எல்லாக் கடைகளையும் மூடிவிட்டார்கள். மணி மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டே ஒரு கடையின் பக்கத்தில் முள்ளங்கிக் கீரையுடன் உட்கார்ந்திருந்தது. வெகு நேரம் உட்கார்ந்திருக்க நேரிட்டதால் சற்றுத் தூங்க ஆரம்பித்து விட்டது.

அப்பொழுது ஒரு கரடி வேகமாக வந்து, கடைத் தெருவில் இங்கும் அங்குமாக அலைந்தது. "அடாடா, எல்லாக் கடைகளையும் மூடியாகி விட்டதே! இதற்கு என்ன செய்வது!" என்று அது தனக்குத்தானே சொல்லிக் கொண்டது. அப்பொழுது அதன் கண் அரைத் தூக்கமாக இருந்த மணியின் பக்கம் சென்றது. உடனே அது முயலின் அருகில் சென்று, "ஏ முயலே, சற்று விழித்துப் பார்!" என்றது.

விழித்துப் பார்த்த மணி, தன்னருகில் காட்டு வைத்தியர் கரடி நிற்பதைப் பார்த்து, "கரடியாரே, என்ன வேண்டும்?" என்று கேட்டது.

அதற்குக் கரடி, "என்னுடைய மனைவிக்கு ஏதோ மயக்கமாக இருக்கிறதாம். அதற்கு முள்ளங்கிக் கீரை

யின் சாற்றில் ஒரு மருந்து கொடுத்தால் உடனே குணமாகும். ஆனால், இக் கடை வீதி முழுவதும் சுற்றியும் கீரை அகப்படவில்லை. இதோ, உன் கையில் வைத்திருக்கும் முள்ளங்கிக் கீரையைக் கொடுத்தால் என் மனைவியின் மயக்கத்தைத் தெளிய வைக்கச் சௌகரியமாய் இருக்கும்" என்றது. உடனே மணி தன்னிடத்திலிருந்த கீரையைக் கரடி வைத்தியரிடம் கொடுத்தது. சமயத்தில் உதவி செய்த மணியை மெச்சிக் கரடி மணியின் கையில் ஒரு ரூபாயை இனாமாகக் கொடுத்தது.



எதிர் பாராத வெகுமானத்தைப் பெற்ற மணி என்ன செய்தது தெரியுமா? ஓடோடியும் சென்று பக்கத்திலுள்ள மற்றொரு கடை வீதியிலிருந்து ஒரு கூடை நிறைய முள்ளங்கிக் கிழங்குகளை வாங்கிக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்றது. கூடை நிறைய முள்ளங்கிக் கிழங்குகளை வாங்கிக் கொண்டு வரும் மணியைப் பார்த்தவுடன் நீலத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது.

நீலம் உடனே மணியிடம் சென்று, "மணி! நான் செய்த குற்றத்தை மறந்து விடு. உனக்குக் கொடுக்காமல் ஏமாற்றி முள்ளங்கியை எடுத்துக் கொண்டு போனதுதான் மிச்சம். நான் நன்றாக ஏமாந்தேன். நரி நம்மிடம் கொடுத்தது நிஜ முள்ளங்கி இல்லை. நவராத்திரி கொலுவில் வைக்கும் மண்ணினால் செய்யப்பட்ட பொம்மை முள்ளங்கி. நிஜ முள்ளங்கியைப் போல அதில் முள்ளங்கிக் கீரையைக் கட்டி வைத்து நம்மை ஏமாற்றி விட்டது. நான் வாயில் வைத்துக் கடித்தவுடன் என் வாய் முழுவதும் மண்ணாகி விட்டது. நான் உன்னை ஏமாற்றியதால் கடவுள் என்னை ஏமாற்றினார். இனிமேல் உன்னை நான் ஏமாற்ற மாட்டேன். உன்னிடம் மிகவும் அன்பாக இருப்பேன்" என்று கூறி, மணியைத் தழுவிக் கொண்டது.

காரடை நோன்பு





உண்மை!

பிட்டு:—ராமு! முத்துவுக்கும், பாண்டுவுக்கும் நேற்றுப் பெரிய சண்டையாமே?

ராமு:—அப்படியா? அவர்கள் இணை பிரியாத நண்பர்கள் ஆயிற்றே!

பிட்டு:—ஆமாம்; அவர்களைப் பிரிப்பதற்கு ஐந்நாறு பேர்கள் வேண்டியிருந்ததாம்!

—டி. சுப்ரமண்யன்.

★

அக்கரை!

தம்பி:—அண்ணா! நீ வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குக் கதைகள் எழுதிப் போடேன்!

அண்ணன்:—ஏண்டா! அதிலென்ன அக்கரை உனக்கு?

தம்பி:—இல்லே, அண்ணா! அந்தக் கதைகள் திரும்பி வரும்போது அந்தந்த நாட்டு ஸ்டாம்பு ஒட்டி வரும். அதை யெல்லாம் சேர்த்து நான் 'ஸ்டாம்பு ஆல்பம்' செய்யலாம் அல்லவா? —டி. என். குப்புஸ்வாமி.

★

வெற்றி!

நண்பர்கள்:—ஓய்! உமக்குப் போட்டிப் பந்தயத்தில் முதற் பரிசு ஆயிரம் ரூபாய் கிடைத்ததாமே! ரொம்ப சந்தோஷம்! எங்களுக்கெல்லாம் ஒரு டீ பார்ட்டி இல்லையா?

வெற்றி பெற்றவர்:—ஏன் ஐயா, என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்? நான் அதற்குப் பிரவேசக் கட்டணமே இரண்டாயிரம் ரூபாய் கட்டியிருக்கிறேனே!

—என். வி. டி.

★

ஏன் சந்தேகம்?

ஊரிலிருந்து வந்திருந்த மாமா, பி. ஏ. பரீக்ஷைக்குப் போகும் தன் மருமானைப் பார்த்து, "பரீக்ஷை முடிந்த பிறகு டில்லிக்கு வந்து விடு!" என்றார்.

மருமான்:—செப்டம்பருக்குள் திரும்பிவிட முடியுமா? —விட்டல் ராவ்.

★

படிக்கலாமா?

நண்பர்களில் ஒருவர்:—உன் வீட்டிலுள்ள "சத்தியமூர்த்தியின் கடிதங்க"ளைக் கொஞ்சம் கொடேன். படித்துவிட்டுத் தருகிறேன்.

நண்பன்:—பிறருடைய கடிதங்களைப் படிப்பது கெட்ட வழக்கமாச்சே. படிக்கலாமா!

—சி. எஸ்.

சொல்வது எப்படி?

காவற்காரன்:—யார் ஐயா, அது? தோட்டத்துக்குள்ளே நாயை அழைச்சுக்கிட்டு வரது?

சாமாவய்யர்:—அது என் நாயல்ல அப்பா!

காவற்காரன்:—பின்னே ஏன் சாமி அது உங்க கூடவே வரது?

சாமாவய்யர்:— அதெப்படியப்பா சொல்றது? நீ கூடத்தான் என்கூட வந்துக்கிட்டிருக்கே! —எம். சுவேதாரண்யம்.

★

படித்ததில்லை!

காப்பி சாப்பிடுபவர்:—என்னய்யா! இந்தக் காப்பியில் கரித் துண்டு மிதக்கிறதே?

சர்வர்:—இதில் என்ன ஆச்சரியம், ஸார்! காப்பியில் கரித் துண்டு மிதக்கத்தான் மிதக்கும். நீங்கள் 'ஸயன்ஸ்' படித்ததில்லையோ?

—பனியம்மாள்.

★

அனுவசியச் செலவு

கோபு (தன் நண்பனிடம்);—நான் இந்த வருஷம் பாஸ் செய்தால் பிள்ளையாருக்குக் கொழுக்கட்டை நைவேத்தியம் செய்வதாக வேண்டிக் கொண்டிருக்கிறேன்.

நண்பன்:—அந்த அனுவசியச் செலவெல்லாம் உனக்குப் பிள்ளையார் வைக்கமாட்டார்.

—சி. ஸ்ரீநிவாசன்.

★

கால் வலி!

உபாத்தியாயர்:—சீனு! எங்கேடா உங்க அண்ணன்? கால் சுளுக்கிக் கொண்டு விட்டது என்று லீவ் போட்டிருக்கானே!

சீனு:—இப்போதுதான் 'புட்பால்' ஆடப் போனான், ஸார்! —என். வி. துரைசாமி.

★

வேண்டாம்!

நண்பர்:—என் குதிரையை வாங்கிக் கொள்கிறீரா? வண்டியில் பூட்டிவிட்டால், பத்து மைல் தூரம் போய்த்தான் நிற்கும்!



மற்றவர்:—அப்பப்பா, வேண்டவே வேண்டாம்! என் காரியாலயம் ஏழு மைல் தூரம் தான் இருக்கிறது! —ஜி. பி. பழனிசாமி.


உங்கள் குழந்தையின் ஜீர்ணசக்தி குன்றிருப்பதாக தெரிந்தால்
உடனே கவனிக்கவேண்டும். அது சால்சம்மந்தமாய் இருக்கலாம், இருக்கால் பெருக்கத்திற்கு காரணமாய் இருக்கலாம்.


அருமையான பற்கள்!
உங்கள் புன்முறுவலை எத்தனை நாட்கள் அவை அழகுபடுத்தக்கூடும்?
ஈறு உபாதிகளை உங்கள் வசீகர புன்னகையை பாழ்படுத்த விடாதீர்கள். தினமும் சுகமளிக்கும் "எஸ். ஆர்." டூத் பேஸ்டினால்* பற்களை சுத்தம் செய்தால் அவைகள் ஆரோக்கியமான ஈறுகளில் உறுதியாகவும், மிக தூய்மையாகவும் விளங்குகின்றன.
*ஈறு வியாதிகளுக்கு பல் வைத்தியர்களால் கையாளப்படும் சிறந்த ஸோடியம் ரிஸினோலியேட் என்னும் மருந்து சேர்ந்தது.
S.R.
FOR TEETH AND GUMS
GSR. 24-50 TM
D. & W. GIBBS LIMITED, LONDON, ENGLAND



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI மார்ச் 24, 1946 4 அண



அதிக வேலை, வியாகுலம், மிகுந்த பிரயாசை முதலியவைகளால் புஷ்டியான தாதுப் பொருள்கள் செலவழிவதால் உங்கள் சரீரம் குன்றிப் போய், பலஹீனமடைந்து தாழ்வுறுகின்றீர்கள். தாதுப் பொருள்களை மறுபடியும் பெறுவது அவசியம் — உங்கள் தேகத்திற்கு மறுபடியும் போஷாக்கு அளியுங்கள். அப்போது பழைய சுகத்தையும் பலத்தையும் அடையும் புதுமையான வழியை உணர்வீர்கள்.

டானிக் ஆகாரமாகிய விக்கல்ப் — சுத்தமாக, சரியாகப் பங்கீடு செய்யப்பட்ட ஒன்பது தாது உப்புக்களையும், அயோடின் ஆகாரத்தையும் உங்களுக்கு அளிக்கிறது. இத்தகைய உன்னதமான வஸ்துக்கள் உங்கள் தேகத்தில் சம்பந்தப்பட்ட உடனேயே நீங்கள் பலமடைய ஆரம்பிக்கிறீர்கள். சோர்வு போய் சுறுசுறுப்பு ஏற்படுகிறது. தாழ்மை மறைகிறது. பலஹீனம் போய் திடமேற்படுகிறது. புதுமையான சுகாதாரத்துடன் திகழ்கின்றீர்கள். இன்றே "விக்கல்ப்" சாப்பிட ஆரம்பியுங்கள்.

VIKELP MINERAL, TABLETS

விக்கல்ப் தாது பில்லைகள்

Ad. No. 5437.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்.

★

தலைமை ஆபீஸ் :
"இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்"
வடக்கு பீச் ரோடு, மதராஸ்

★

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராய நகர், புரசவாக்கம், எழும்பூர்.

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800

செலுத்தப்பட்ட
மூலதனம் ரூ. 44,42,662

ரிஸர்வ் நிதி ரூ. 49,50,000

டெபாஸிட்டுகள் :
31-12-45 முடிய
ரூ. 13½ கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர்
செக்ரடரி.

F M B.

Regd. No. M. 4392



சார்லீஸ் பிஸ்கட்ஸ்

சிறந்தவை

CHARLEY & Co.,
USILAMPATTI.

Madras Branch: 158, Poonamallee High Road :: Agents For Salem & N. Arcot Dts. The General Agencies Corporation, First Agraharam, Salem Agents For Nilgris: Messrs. Brilliant Traders, Ootacamund.